தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

விலை 30 ரூபா • தீபம் 178 • 17.03.2019

ஞானம் ஐஸ்கிறீம்



திருமண நாள் மற்றும் பிறந்த நாள் பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய விழாக்களுக்கும் ஓடர் மூலம் வழங்கப்படும். கோடை காலத்தை குளிர்மையாக்கிட குடும்பத்துடன் சென்று மகிழ்ந்திட ஞானம் ஐஸ்கிறீம்.

இதோ புதுப் பொலிவுடன் பசுமைப் பூங்காவில் ஞானம் ஐஸ்கிறீம்.

டிப்போ சந்தி அருகில் கனகபுரம் வீதி. கிளிநொச்சி.
தொலைபேசி இல: 0775230064



## விமானக் கனவுக்கு ஓய்வுகொடுத்த புலிகள்



## விண்வெளியில் புதிய பாய்ச்சல்



## போர்க் குற்ற விசாரணைப் பொறிமுறை: தமிழர்கள் கையில் எடுக்க வேண்டும்

Yarl Ahi Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்



திருமண நாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும்
ஏனைய விழாக்களுக்கும்
வாகன வசதியுடன் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களை அறிந்திட
www..yarl.com ஐ பார்வையிடவும்



இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No.46, Kanakapuram Road, Kilinochchi.
T.P : 021 791 7585 / 077 023 2328

# தத்துவ நிபுணரின் தவிப்பு!!!



அரச சபைக்கு தத்துவ ஞானி ஒருவர் வந்தார். தத்துவம் என்பதைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு இறுதியில்," நாம் கண்ணால் காண்பது, நாவினால் சுவைப்பது, மூக்கினால் நுகர்வது எல்லாமே நாம் அனுபவிப்பதாகத் தோன்றுமே தவிர, செய்யும் ஒவ்வொரு செயலும் பிரம்மையே தவிர உண்மையில் நாம் அப்படிச் செய்வதில்லை" என்று கூறி தத்துவ ஞானி என்பதற்கு ஏற்ப குழப்பமாகக் கூறி முடித்தார். அதனை சபையோர் ஏற்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.


பொறுமையோடு இதைக் கவனித்துக் கொண்டிருந்த தெனாலி ராமன் எழுந்து, "ஐயா, தத்துவ ஞானியே நாம் சாப்பிடுவதும் கூட வெறும் பிரம்மைதானா? நாம் சாப்பிடுவதற்கும், சாப்பிடுவதாக நினைப்பதற்கும் வேறுபாடு இல்லையா?" என்று கேட்டார். இல்லை என்று ஆணித்தரமாகக் கூறினார்தத்துவ ஞானி.

"இன்று மன்னர் பிரான் வழங்கும் அறுசுவை விருந்தில் நாம் அனைவரும் கலந்து மகிழ்ச்சியோடு சாப்பிடலாம். அப்பொழுது இந்த தத்துவ நிபுணர் மட்டும் சாப்பிடாமல், சாப்பிடுவதாக நினைத்துக் கொண்டு வயிற்றை நிரப்பிக் கொள்ளட்டும்" என்று கூறினார் தெனாலி ராமன்.

தத்துவ ஞானி தலை குனிந்தார்.


# மனிதனைப் பற்றிய சில உண்மைகள்

- இருமலின் வேகம் மணிக்கு 100 கிலோ மீட்டர்.
- ஒரு சிசுவின் கையில் ரேகைகள் 3ஆவது மாதத்திலிருந்து உருவாகின்றன.
- கை, கால்கள் நகங்களின் அடிப்பகுதியிலிருந்து அதன் மேல்பாகம் வரை வளர்வதற்கு 6 மாதங்கள்ஆகின்றன. கால் நகங்களை விட கைவிரல் நகங்கள் வேகமாக வளர்கின்றன.



- ஒரு மனிதனுக்கு சரியாக தினமும்40 முதல் 100 தலைமுடிகள் உதிர்ந்து விடுகின்றன.
- கம்யூட்டரில் சில மணி நேரங்கள் பணிபுரிந்து விட்டு பார்வையை சில நொடிகள் வெள்ளைநிற காகிதத்தில் செலுத்தினால் அந்தக் காகிதம் இளஞ்சிவப்பு நிறமாகத் தெரியும்.

# உங்களுக்குத் தெரியுமா?



### 1.போக்குவரத்து விளக்குகள்!!!

பெரிய நகரங்களில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த வண்ண விளக்குகள் பொருத்தப்பட்ட கம்பத்தை அல்லது அமைப்பைக் கண்டிருக்கிறோம். இவ்விளக்குகள் 3 வண்ணங்களில் அமைந்திருக்கும். அவை முறையே பச்சை, மஞ்சள் மற்றும் சிகப்பு ஆகியன. ஜே.பி. நைட் என்பவர் லண்டன் மாநகரில் 1868ஆம் ஆண்டு இப்போக்குவரத்து விளக்குகளைக் கண்டு பிடித்தார்.

### 2.சாக்லேட்!!!



சாக்லேட் கி.பி. 1350ஆம் ஆண்டுகளில் தென் ஆபிரிக்காவில் பயன்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. அங்கு வாழ்ந்து வந்த மக்கள் சாக்லேட்டை கொக்கோ மரங்களில் இருந்து பெற்றனர். பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் நாட்டைச் சார்ந்த ஒருவர் சாக்லேட்டை, பால் மற்றும் சக்கரையுடன் கலந்து ஒர் குளிர்பானமாக அறிமுகப்படுத்தினார். பின்னர் கெய்லர் என்ற ஸ்வீடிஷ் நாட்டைச் சார்ந்த ஒருவர் சாக்லேட்டைத் துண்டுகளாகவும், கட்டிகளாகவும் திட வடிவத்தில் உருவாக்கினார்.

# மருந்தாகும் மாதுளம்பழம்!!!



எல்லாப் பழங்களும் உடலுக்கு உகந்தவை என்றாலும் மாதுளம் பழம் மிக சிறப்பான ஒரு பழம்!! யூதர்கள் பொதுவாக ஒரு பழத்தில் 630 முத்துக்கள் என்றும் ஒவ்வொரு முத்துக்களும் ஆசிர்வதிக்கப்பட்டது எனவும் கருதுகிறார்கள் – திருக்குரானில் சொர்க்கத்தின் பழம் எனவும் வர்ணிக்கப்படுகின்றது..!! இந்துக்கள் வழிபாட்டுக்கும் அபிஷேகம் பண்ணவும் மாதுளம் பழம் பயன்படுகிறது....

இனிப்பு புளிப்பு துவர்ப்பு சுவைகளையும் கொண்டிருக்கிறது.....செரிமான திறன் குறைந்தவர்கள் வறட்சியான இருமல் இருப்பவர்கள்

மூக்கால் இரத்தம் கொட்டுபவர்கள் மாதுளம் பழ தோலை மை போல அரைத்து எலுமிச்சம் சாறு கலந்து

உண்டு வந்தால் சிறந்த பலன் கிடைக்கும். வயிற்றுப் போக்கையும் விரைவில் கட்டுப் படுத்தும். மாதுளங்கோதை அவித்து குடித்தால்

வயிற்று வலி நீங்கும்.









# விமானக் கனவுக்கு ஓய்வு கொடுத்த புலிகள்

விமானம் எழுவதும் விழுவதுமாக இருக்கவே வேகத்தைக் கூட்டினால் பறந்து விடலாம் என நினைத்த விமானி வேகத்தைக் கூட்டினார். ஆனால் விமானம் பறக்கவில்லை. அதிகூடிய வேகத்தாலும் – விமானத்திற்கென ஓடுதளப் பாதை வரையறுக்கப்படாமலும் இருந்த நேரத்தில் வேகமாகப் பாய்ந்து சென்ற விமானம், தூரத்தில் நின்ற மரம் ஒன்றுடன் மோதியது.

விமானத்துக்கு சேதம் சற்று அதிகம்தான் ஆனாலும் விமானிக்கு பெரிய பாதிப்போ அல்லது காயமோ ஏற்படவில்லை. இலேசான அடிகளுடன் தப்பித்தார். இந்தச் சம்பவத்துடன் புலிகள் அந்த விமானத்தைப் பறக்க வைக்கும் ஆசையைத் தற்காலிகமாகக் கைவிட்டனர். அடுத்து வந்த நாட்கள் சக ஆயுத அமைப்புகள், இலங்கை இராணுவத்துடனும் ஆங்காங்கே சண்டைகள் நடந்தன. அடிக்கடி நடந்த சண்டைகளால் விமானக் கனவு பற்றிய திட்டத்துக்கு புலிகள் சற்று ஓய்வைக் கொடுத்தனர்.

இது இவ்வளவும் தாயகத்தில் நடந்து கொண்டிருந்தது. இக்காலத்தில் தலைவர் பிரபாகரன் ஈழத்தில் இருக்கவில்லை. தமிழ்நாட்டில் பயிற்சிகளை நடத்திக் கொண்டும், புலிகளுக்கு தேவையான வளங்களை பெறுவதற்கும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தார்.

தமிழ்நாட்டில் தங்கியிருந்த தலைவர் பிரபாகரனுடன் நெருக்கமாகி ஒருவர் இணைகிறார். சென்னை இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் பொறியியல் படித்த இவர், கனடாவில் விமான எந்திரவியல் படித்தவர். அத்துடன் கப்பல் ஒன்றில் இரண்டாம்தர பொறியிலாளராகவும் பணியாற்றிய அனுபவமும் கொண்டவர். தலைவர் பிரபாகரனிடம் இருந்த முப்படைக் கனவுக்கு முக்கியமாக இவர் உயிர் கொடுப்பார் என்பது அவரது நம்பிக்கை. அவர் வேறு யாருமல்ல வான் புலிகளின் கட்டளைத் தளபதி கேணல் சங்கர் அல்லது முகிலன் என்றழைக்கப்பட்ட வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்.

வான்புலிகள் பற்றி நாம் பார்க்கும்போது கேணல் சங்கரை நாம் தவிர்த்துவிட முடியாது. ஏனெனில் வான்புலிகளின் முதல் கட்டளைத் தளபதியும் தந்தையும் இவர்தான். வான்புலிகளை மட்டுமின்றி புலிகள் அமைப்பின் கடற்புலிகள், கடற்கரும்புலிகள், நீரடி நீச்சல் பிரிவுகளுடன் பெண்கள் படையணியைக் கட்டமைத்ததிலும் பயிற்சியளித்ததிலும் இவரின் பங்கு அதிகம் இருந்தது. எனவே அவரைப் பற்றி சற்று விரிவாகப் பார்க்கலாம்.

கேணல் வடமராட்சியைச் சேர்ந்தவர்தான். ஹாட்லிக் கல்லூரியின் மாணவன். கணக்கில் புலி என்பார்களே இவரும் அத்தகையவர்தான். கணக்கில் மட்டுமல்ல விளையாட்டுத் துறையிலும் இவர் அசகாயசூரர். இவரது இரு சகோதரர்கள் ஏற்கனவே புலிகள் அமைப்பில் செயற்பட்டு வந்தனர். லெப். சித்தார்த்தன் (வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்) 14.02.1987 நாவற்குழி இராணுவ முகாமை தாக்குவதற்காக வடிவமைத்த வெடிமருந்தேற்றிய பௌசர் வாகனம் எதிர்பாராமல் வெடித்ததில் லெப்.கேணல் பொன்னம்மான் உட்பட வீரச்சாவடைந்த 10 மாவீரர்களில் ஒருவர்.


எம்.ஜி.ஆருடனான சந்திப்பின் போது தலைவர் பிரபாகரனுடன் கேணல் சங்கர்.

இவரின் மற்றைய சகோதரன் கப்டன் கரன் (வைத்திலிங்கம் மனோகரன்) 05.10.1987 அன்று இந்திய அமைதிப் படையின் காலத்தில் சமாதானம் நிலவிய தருணத்தில் தமிழ்நாட்டுக்கு படகில் சென்று திரும்பிய லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் ஆகியோருடன் இந்திய கடற்படையால் பிடிக்கப்பட்டு இலங்கை இராணுவத்திடம் கையளிக் கப்பட்டபோது சயனைட் அருந்தி வீரச்சாவைத் தழுவிய பன்னிரு வேங்கைகளில் ஒருவர்.

கேணல் சங்கர் வவுனியாவில் தங்கியிருந்த போது, 1980 களின் ஆரம்பத்தில் புலிகள் அமைப்புடன் அவருக்கு தொடர்பு ஏற்படுகின்றது. பின்னர் இந்தியாவுக்கு படிக்கச் சென்றவர், தலைவர் பிரபாகரனின் நண்பராகிறார். இந்த நட்பின் நெருக்கத்தால் 1983 களில் கேணல் சங்கர் தன்னை முழுமையாக விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைத்துக் கொள்கின்றார்.

அக்காலத்தில், தலைவர் பிரபாகரன் தமிழ்நாட்டில் தங்கியிருந்ததாலும், பயிற்சிகள் அங்கேயே வழங்கப்பட்டதாலும், போரில் காயமடைந்தவர்களுக்கான மேலதிக சிகிச்சைகள் தமிழ்நாட்டிலேயே வழங்கவேண்டிய சூழ்நிலை இருந்ததாலும் தமிழ்நாட்டுக்கு புலிகள் அடிக்கடி பயணிக்க வேண்டி ஏற்பட்டது. இதற்கு மக்களில் நம்பிக்கையான ஓட்டிகளே உதவினர்.

தமிழீழத்துக்கான போரில் கடலின் பங்களிப்பே அதிகம் என்பதால் கடற்படை பலமின்றி எதையும் சாதிக்க முடியாது என்பதை உணர்ந்த நிலையிலும், இடையில் ஏற்பட்ட சில சம்பவங்களும் கடற்போக்குவரத்து மற்றும் அரசியல் சூழ்நிலைகளும் கடற்புலிகளின் உருவாக்கத்துக்கு அடித்தளமிட்டன. எனவே கடல் பற்றிய அறிவு, பொறியியல் தொழில்நுட்ப அறிவு, படைக் கட்டுமாணம் பற்றிய அறிவு இருந்த சங்கரிடம் கடற்புலிகளைக் கட்டமைக்கும் பணியை தலைவர் பிரபாகரன் கொடுத்தார்.

ஆரம்பத்தில் கடல்புறா எனப் பெயரிடப்பட்ட கடற்புலிகளின் தளபதியாக சூசை பொறுப்பேற்றார். கடற்புலிகளுக்கு தேவையான பயிற்சிகளையும், படகு சார்ந்த விடயங்களையும் சங்கர் மேற் பார்வை செய்தார். தொடர்ந்து, கடற்புலிகளின் சிறப்பு அணியாக கடற்கரும்புலிகள் உருவாக்கப்பட்ட போதும் இவரது பங்களிப்பே தேவைப்பட்டது. கடற்கரும்புலி களுக்கான வெடிமருந்தேற்றிய, இலக்கைத் தாக்கும்வரை கரும் புலியை பாதுகாக்கக்கூடிய படகுகளை இவரே தயாரித்தார். கரும்புலிகளுக்கான பயிற்சிகளையும் இவரே வழங்கியிருந்தார்.

இவரின் கீழ் பயிற்சி பெற்ற, மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் 10.07.1990 வல்வெட்டித்துறை கடலில் எடித்தாரா கப்பலை தாக்கியழித்தனர். இதுவே கடற்கரும் புலிகளின் முதல் தாக்குதலாகும். இத்தாக்குதல் களில் சிக்கல்கள் ஏற்படவே சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவை புலிகள் உருவாக்கினர். இதற்கு அத்திபாரம் இட்டவரும் பயிற்சிகள் வழங்கியவரும் கேணல் சங்கர்தான்.

இந்தியப் படையினருக்கு எதிரான போர், மூன்றாம் கட்ட ஈழப் போர்களில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருந்ததாலும் சில சூழ்நிலைகள் கருதியும் விமானப் படையைக் கட்டமைக்கும் நடவடிக்கையை புலிகள் தொடங்கவில்லை. ஆனால் அவர்களின் விமானப் படைக் கனவுக்கு இடையிடையே உயிர் கொடுத்துக் கொண்டிருந்தார் கேணல் சங்கர். மூன்றாம் கட்ட ஈழப் போர் சமயத்தில் புலிகள் வெற்றிகரமான விமானப் படைக் கட்டமைப்பில் ஒரு பகுதியை நிறுவினார்கள்.

அந்தக் கட்டமைப்பு என்ன? இது புலிகளுக்கு சாத்தியமானதா? என்பவை அடுத்த இதழில்.

# போர்க்குற்ற விசாரணை

## பொறிமுறையை தமிழர் தரப்பு கையில் எடுக்கவேண்டும்

—— மு.திருநாவுக்கரசு

சர்வதேசப் போர்க் குற்ற விசாரணை மேற்கொள்ளப்படுவதில்லை. ஆனால் அதனை அடைவதற்கான நிகழ்ச்சி நிரல் 6 ஆண்டு கால திட்டத்திற்குரியது என்ற எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று 2015 ஆம் ஆண்டு தேர்தல் காலத்திலேயே உள்நாட்டு – வெளிநாட்டு சக்திகள் இணைந்த வகையில் உருவாக்கப்பட்டது. போர்க் குற்ற விசாரணையைக் கைவிட்டு அதற்குப் பதிலாக அரசியல் தீர்வே முக்கியமானது என்ற கருத்தை முக்கிய தமிழ்த் தலைவர்கள் சிலர் 2015 ஆம் ஆண்டிலேயே வெளியிடத் தொடங்கி விட்டனர்.

ஆனாலும் சர்வதேச கலப்பு போர்க் குற்ற விசாரணை என்ற துருப்பை அரசியல் அரங்கில் சிங்கள – பௌத்த தீவிரவாதிகளுக்கு எதிராகவும், தமிழ் மக்களை ஏமாற்றி 'நல்லாட்சி" அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காகவும் பயன்படுத்துவது என்ற ஒரு வகை நாடக அரசியல் அரங்கேறத் தொடங்கியது. காலத்திற்குக் காலம் போர்க் குற்றம் பற்றிய காட்டமான அறிக்கைகள் ஒருபுறமும், அதேவேளை நல்லாட்சி அரசாங்கத்தின் செயல்களில் முன்னேற்றம் உண்டு என்று இன்னொரு வகையாகவும் கூறி இறுதியில் அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையிலான தீர்மானங்களே நடைமுறைகளாகின்றன.

எப்படியோ இவ்வாறு ஏமாற்றுவதில் நான்கு ஆண்டுகள் கடந்தேறி விட்டன. கணக்கின்படி இந்த ஆண்டும் எதிர்வரும் ஆண்டும் தேர்தல் ஆண்டுகளாகும். எனவே சுமாராக ஒன்றரை ஆண்டுகளுக்கு இந்த ஏமாற்றுகரமான நிலையைத் தொடர்ந்தாக வேண்டும். இன்னும் 2 ஆண்டுகளுக்கு போர்க் குற்ற விசாரணைக்கான அவகாசம் அரசாங்கத்திற்கு தேவைப்படுகின்றது என்ற நிலைப்பாட்டிற்குப் பின்னால் கடந்த 2 மாதங்களில் விநோதமான 3 நடவடிக்கைகள் அரங்கேறியுள்ளன.




1) கொழும்பில் 2008–2009 காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கரனகொட உட்பட 15 படையினர் வரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளதான செய்தி முதலில் வெளியாகி அது ஊடகங்களின் பக்கங்களை 2 மாதங்களாக நிரப்பியது.

2) தென்னாபிரிக்காவில் Truth and Reconciliation Commission அமைக்கப்பட்டு அங்கு போர்க் குற்ற விசாரணையின்றி மன்னிப்பு அளிக்கப்பட்டு முடிவிற்கு கொண்டுவரப்பட்டது போல இலங்கையிலும் அப்படி Truth and Reconciliation Commission என்ற உண்மை கண்டறிவதற்கான குழு அமைக்கப்பட்டு தமிழ் மக்களின் சம்மதத்தோடு இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் மன்னித்து நல்லிணக்கம் உருவாக்கப்படுவதற்கான அறிக்கையை பிரதமர் கடந்த 12 ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத்தார்.

3) ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சிக் குழு கூட்டம் நடைபெற்று அதில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசியல் யாப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்ற செய்தி கடந்த வாரம் வெளியானது. இம்மாதம் 20 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் முன் போர்க் குற்ற விசாரணை தொடர்பாக மேலும் 2 ஆண்டுகள் கால அவகாசம் பெறுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முகாந் திரமான ஆவணத் தயாரிப்புக்களாக உள்ளன.

இவ்வாறு 2 ஆண்டு கால அவகாசம் வழங்கப்பட்டதும் மேற்படி இந்த மூன்று விடயங்களும் விளையாட்டுப் பிள்ளைகள் வானத்தில் பறக்கவிட்ட பட்டங்கள் போல் காட்சியளிக்கும். இதை இன்னொரு வகையில் சொல்வதென்றால் மேற்படி இந்த மூன்று ஆவணத் தயாரிப்புக்களும் பட்டம் கட்டுவதற்கான வண்ணக் காகிதங்களாகவே அமையும். நிலைமை இப்படி இருக்கையில் அரசியல் யாப்பு திருத்தம் சம்பந்தமாக தமிழ்த் தரப்பில் எதிரும் புதிருமான முரண்பாடுகள் மேடைக்கு வந்துள்ளன. இதை விளக்குவதற்கு ஒரு சிறிய உதாரணம் மட்டும் போதுமானது.

> **“ 2 ஆண்டுகள் கால அவகாசம் வழங்குவதற்கான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேறப் போகின்றது என்பது திண்ணம். இது தமிழ்த் தரப்பிற்கு முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின் கிடைத்த மேலும் ஒரு பாரிய தோல்விதான். குறைந்தபட்சம் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசி யலுக்கும் கிடைத்த பெருந் தோல்விதான். அத்துடன் இது மொத்தமாக தமிழ்த் தலைவர்கள் அனைவருக்கும் கிடைத்த தோல்விதான். ”**

முதலாவதாக சிங்களத் தலைவர்கள் யாரும் போர்க் குற்ற விசாரணையையோ அல்லது அரசியல் தீர்வையோ மேற்கொள்ளப் போவதில்லை. இதைப் புரிந்து கொள்வதற்கு அணுப்பகுப்பாய்வு செய்ய வேண்டியதுமில்லை. செவ்வாய் கிரக ஆய்வுகூடங்களுக்குள் நுழைய வேண்டியதுமில்லை. சிங்கள அரசு ஒருபோதும் தீர்விற்குத் தயாரில்லை. ஆனால் அது தெளிவாக ஏமாற்றும் வித்தையிலும், தற்காப்பு வித்தையிலும் கைதேர்ந்தது. இங்கு விசித்திரம் என்னவென்றால் தீர்வின் பேரால் தமிழ் தலைவர்களை ஒருவருடன் ஒருவர் என மோத விடுவதிலும் கைதேர்ந்தது.

பிராணிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக பயிற்சிக் கட்டை, பயிற்சிப் பந்து, கிளிக்கர் (Clicker) என பல பொருட்கள் உபயோகப் படுத்தப்படுகின்றன. உதாரணமாக நாய்க்கு பயிற்சி அளிப்பதற்காக அல்லது குரங்கு, சிம்பன்சி போன்ற பிராணிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக மேற்படி பயிற்சிக் கட்டை, பயிற்சிப் பந்து, கிளிக்கர் என்பன பயன்படுத்தப்படுகின்றன. பயிற்சியாளன் மேற்படி பிராணிகளை பயிற்று விப்பதற்கு மேற்படி பயிற்சிப் பொருட்களை வீசியோ, காட்சிப்படுத்தியோ அவற்றை செயற்படச் செய்து தனக்கு வேண்டியவாறு அவற்றைப் பயிற்றுவித்து விடுவார்.

சிங்களத் தலைவர்கள் இவ்வாறு பயிற்சி கட்டைகளாகவோ, பயிற்சிப் பந்துகளாகவோ, கிளிக்கர்களாகவோ வீசும் அரசியல் யாப்பு, அரசியல் தீர்வு என்ற மாயமான்களைக் காட்டி தமிழ்த் தலைவர்களை ஒருவருடன் ஒருவர் மோதவிடுவதிலும் வெற்றி பெறுகிறார்கள். “Don’t trouble troubles before trouble troubles you” என்ற உளவியல் சார்ந்த ஆங்கிலப் பழமொழி இங்கு பெரிதும் கவனத்திற்குரியது. அதாவது 'பிரச்சினை உன்னைப் பிரச்சினைப்படுத்த முன்பு, நீ பிரச்சினைகளைப் பிரச்சினையாக்கி விடாதே."

ஆதலால் அரசியல் தீர்வு என்ற சிங்களத் தலைவர்களின் கிளிக்கர்களுக்குப் பின்னால் தமிழ்த் தலைவர்கள் பயணித்து தமக்குள் மோதுப்படாது இருக்க வேண்டியது முதல்கட்ட முன்நிபந்தனையாகும். இப்போது தமிழ்த் தலைவர்கள் செய்ய வேண்டிய பணி உடனடியாகக் கண்முன் இருக்கும் இனப்படுகொலை தொடர்பான போர்க்குற்ற விசாரணையை முன் னெடுப்பது பற்றிய பிரச்சினையை அனைவரும் இணைந்து கையில் எடுக்க வேண்டியதுதான்.

இந்த தேர்தல் ஆண்டில் அரசியல் யாப்புத் திருத்தம் நிகழும் என்று கற்பனை செய்வதே கடினமானது. எனவே இப்போதைய முதற்பிரச்சினை போர்க் குற்ற விசாரணையும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்கள் என்பனதான்.

(05 ஆம் பக்கம் பார்க்க...)

# மீண்டும் ஒரு வரலாற்றுத் துரோகம்!

தீபம்

இந்த வாரம் பரபரப்பு நிறைந்த வாரமாக இருக்கும். ஒருபுறம் தாயகத்திலும், புலத்திலும் தமிழ் மக்கள் போராட்டங்களை தொடங்கியுள்ளனர். இன்னொருபுறம் தமிழர் அரசியல் கட்சிகள் ஜெனிவா பயணமாகியுள்ளனர். இவர்களின் கோரிக்கை இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது: மனித உரிமைகள் மீறல், போர் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்: சர்வதேச பொறிமுறை அவசியம் என்பவற்றை வலியுறுத்தியே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் மறுமுனையில் கால அவகாசம் கோரி, அரச தரப்பும் ஜெனிவா பயணமாகியுள்ளது. இவர் கொண்ட இந்தக் குழுவில் அண்மையில் வடக்கு ஆளுநராக நியமிக்கப்பட்ட சுரேன் ராகவனும் பயணமாகியுள்ளார். தமிழர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தாய்க்கட்சியாக உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளுடன் தமிழ், மக்கள் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகள் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கோரிக்கைகளை விடுக்கவுள்ளன.

இனப்பிரச்சினையை ஆரம்பிக்கப்பட்டபோதே அதைத் தீர்க்காமல் விஸ்வரூபம் எடுக்கச் செய்த பேரினவாத அரசுடன் இணைந்து செயற்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி, இப்போதும்கூட அரசாங்கத்துக்கு ஆதரவாக கால அவகாசம் வழங்குவதற்கான முன்னெடுப்புகளில் ஈடுபட்டு வருகின்றன. அக்கட்சியின் போக்கும் கட்சித் தலைவர்களின் செயற்பாடுகளும் இதையே வெளிப்படுத்துகின்றன. ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசம், அரசியல் கைதிகளுக்கு தண்டனை, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு அல்லது மரணச் சான்றிதழ், காணி விடுவிப்பு இல்லை, புதிய அரசமைப்பு மாற்றம் இல்லை, போர் குற்றம், மனித உரிமைகள் மீறலுக்கு எதிரான விசாரணைகள் இன்மை எனத் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் மட்டுமே கிட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்குவது என்பது தமிழர் பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்வதாகவே இருக்கும். தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தாய்க் கட்சியே – அதுவும் தந்தை செல்வா ஆரம்பித்த கட்சியே துணை போவது போன்ற வரலாற்றுத் துரோகம் நிறுத்தப்பட வேண்டும். மீறி அது தொடர்கிறபோது மக்கள் அக்கட்சியை தூக்கி எறிய வேண்டும்.

# போர் குற்ற விசாரணை...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவற்றை செயற்படுத்துவதற்குப் பொருத்தமான ஒரு பொறிமுறையை தமிழ்த் தலைவர்கள் முதலில் உருவாக்க வேண்டும். உள்நாட்டிலும், அண்டைநாட்டிலும், சர்வதேச அரங்கிலும் இதற்கான முன்னெடுப்புக்களை புத்திபூர்வமாகவும், தொழில்தேர்ச்சியுடனும் முன்னெடுப்பதற்கான ஓர் அமைப்பையும் அதற்கான பொறிமுறையையும் உருவாக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தரப்பில் நீதி கோரும் அனைவரின் விருப்பங்களையும் கடந்து போர்க் குற்ற விசாரணைக்கு மேலும் 2 ஆண்டுகள் கால அவகாசம் வழங்குவதற்கான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேறப் போகின்றது என்பது திண்ணம். இது தமிழ்த் தரப்பிற்கு முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின் கிடைத்த மேலும் ஒரு பாரிய தோல்விதான். குறைந்தபட்சம் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியலுக்கும் கிடைத்த பெருந் தோல்விதான். அத்துடன் இது மொத்தமாக தமிழ்த் தலைவர்கள் அனைவருக்கும் கிடைத்த தோல்விதான்.

இந்த தோல்வியை யாரும் சாதாரணமாக எடுத்துக் கொள்வதோ அல்லது அந்த தோல்விக்கு தான் பொறுப்பில்லை என்று ஒதுங்கிக் கொள்வதும் தவறு. இப்போதாவது இந்த மார்ச் தீர்மானத்தில் தோல்வி நிச்சயமாகிவிட்டது என்ற பின்னணியில் 11ஆவது ஆண்டு தோற்காது இருப்பதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு. இதற்கான ஓர் அமைப்பையும், அதற்கான பொறிமுறையையும், அதற்குத் தேவையான நிதி வளங்களையும் சர்வதேச போர்க்குற்ற விசாரணையை விரும்பும் தலைவர்கள் முன்னெடுக்க வேண்டும்.

# இன்னும் குண்டுகள்...

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கட்டுரைகள் மற்றும் நாடாளுமன்றத்தில் அதிகரிக்கும் அழுத்தங்கள் காரணமாக மிக் விவகாரத்தை ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வந்தது. எனினும், இந்தக் குழு ஒருபோதும் அமைக்கப்படவில்லை. மாறாக இந்தக் கட்டுரைகளுக்கு பதில் அளிக்கும் வகையில் கோட்டபாய ராஜபக்ஷ லசந்த விக்கிரமதுங்கவிற்கும் அவரது பத்திரிகைக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்தார். மவுன்ட்லவேனியா நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு இடம்பெறவிருந்த நிலையிலேயே இக்பால் அத்தாஸ் நாட்டை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கப்பட்டார். பின்னர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக்கொல்லப்பட்டார்.

இக்பால் அத்தாஸ் நிதிக்குற்றங்கள் தொடர்பான விசேட பொலிஸ் பிரிவிடம் வாக்குமூலம் அளிக்கும்வரை - 2015 இந்த விவகாரம் செய்திகளில் இடம்பெறாத நிலையில் காணப்பட்டது. நிதிக்குற்றங்கள் தொடர்பான விசேட பொலிஸ் பிரிவின் விசாரணைகள் இக்பால் அத்தாஸ் மற்றும் லசந்த விக்கிரமதுங்க ஆகியோர் தெரிவித்த விடயங்கள் சரியானவை என்பதை உறுதி செய்துள்ளன. உதயங்க வீரதுங்க இந்த விவகாரத்தில் நேரடி தொடர்பை கொண்டுள்ளார் என எவ்.சி.டி தெரிவித்துள்ளதுடன் அவரை சந்தேகநபராக அறிவித்துள்ளது. பெலிமிசா நிறுவனத்தின் பின்னால் உள்ள சிங்கப்பூர் வர்த்தகரை கண்டுபிடித்துள்ள காவல்துறையினர் குறிப்பிட்ட போலி நிறுவனம் பிரிட்டிஸ் வேர்ஜின் தீவுகளை தளமாகக் கொண்டு என்பதையும் கண்டுபிடித்துள்ளனர்.

எவ்.சி.டியினர் உக்ரைனிற்கு விஜயம் மேற்கொண்டு உக்ரைன் அரசாங்கத்தின் ஆதாரங்களையும் பெற்றுக்கொண்டனர். உக்ரைன் அரசாங்கம் மிக் விமானங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் 2006 இல் எந்தவித உடன்படிக்கையையும் செய்துகொள்வில்லை என தெரிவித்துள்ளது. இலங்கை விமானப் படையினருடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் போலியானதாகும். உக்ரைன் அரசாங்கம் சிங்கப்பூரைச் சேர்ந்த டி.எஸ்.லீ மற்றும் என்ஜி. லே.கிம் ஆகிய இருவருக்கும் மிக் விமானங்களை விற்பனை செய்துள்ளது. அவர்கள் அதனை இலங்கை விமானப் படைக்கு வழங்கியுள்ளனர்.


சிங்கப்பூர் பிரஜைகள் ஒரு விமானத்துக்கு 1.2 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் விட கொஞ்சம் அதிகமாக வழங்கியதாக உக்ரைன் அரசாங்கம் எவ்.சி.ஐ.டியினரிடம் தெரிவித்துள்ளது. அதாவது, விமானப் படையினர் பெலிமிசா ஹோல்டிங்கிற்கு ஒவ்வொரு விமானத்திற்கும் 2.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளனர். ஒவ்வொரு மிக் விமானத்திலும் 100 வீத இலாபம் பெற்றது யார் என்பது குறித்து எவ்.சி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொள்வனவு நடைமுறையை ஆரம்பித்து வைத்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு தலைமை வகித்த முன்னாள் விமானப்படை தளபதி ரொசான் குணதிலக ஆகியோரை எவ்.சி.ஐ.டியினர் விசாரணை செய்துள்ளனர். எனினும், இருவரையும் விசாரணைகளின் போது சந்தேக நபர்கள் என குறிப்பிடவில்லை. மிக் விமானக் கொள்வனவு தொடர்பில் தான் எவ்.சி.ஐ.டியினரால் கைதுசெய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். உயர் நீதிமன்றமும் பொலிஸார் கைதுசெய்வதைத் தடுத்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

(முற்றும்)


பசு வதையை தடுப்போம்!

மாட்டிறைச்சி மனிதனின் ஆரோக்கிய வாழ்வைக் கெடுத்து மரணத்தை ஏற்படுத்தும்



# நேரடி விற்பனை என்ற பெயரில்

# கற்றுக் கொ(ா)டுக்கப்படும் யாழ். இளைஞர் சமூகம்

- லம்போதரன்

நேரடியாக வீட்டுக்கே வந்து விற்பதால்தான் இந்த விலைக்குத் தர முடிகிறது. எல்லா நேரங்களிலும் இது மாதிரி குறைந்த விலையில் உங்களுக்கு இந்தச் சாமான் கிடைக்கப் போவதில்லை. ரவுணுக்கு (யாழ். நகரம்) போய் வாங்கினாலும் அது இதை மாதிரி ஒரிஜினல் இல்லை" என்று சொன்னார்கள் அவர்கள்.

வந்தவனுக்கு ஒரு இருபது வயது இருக்கும். அவனோடு கூட வந்த அந்த இளவயதுப் பெண்ணின் வயதை இருபத்திரண்டு மதிக்கலாம். அவர்களைப் பார்த்தால் ஏமாற்றுபவர்களாக இல்லை. மேற்சொன்னதையே திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அவர்கள் வார்த்தைகள் கண்களை மறைக்க அவள் அதனை வாங்கியே விட்டாள்.

இது சந்திரா வீட்டில் நடந்த கதை. ஒருநாள் மதியம் இருக்கும். மேற்குறிப்பிட்ட இருவரும் சந்திரா வீட்டிற்கு வந்து வாசலில் கேற்றடியில் நின்று குரல் கொடுத்தனர். சந்திரா மட்டும் தனியாக வீட்டில் இருந்தாள். "இப்ப ஒருத்தரும் இல்லை. போட்டுப் பிறகு வாங்கோ" என்று சொல்லிவிட்டுப் போக முன்னர்,"அக்கா குடிக்கக் கொஞ்சம் தண்ணி தாங்கோ" என்று அவர்கள் இருவரும் கோரஸாகக் குரல் கொடுத்தனர்.

அந்த உச்சி வெயிலில் நின்ற இருவரையும் பார்க்கச் சந்திராவுக்குப் பாவமாக இருந்தது. கேற்றைத் திறந்து அவர்களை உள்ளே வரச் சொன்னாள். இரண்டு கிளாஸ் நிறையத் தண்ணீரை ஊற்றிக் குடிக்கக் கொடுத்தாள். தண்ணீரைப் பருகிக் கொண்டே, "சும்மா பாருங்கோ அக்கா" என்று சொல்லி தமது முதுகில் தொங்கவிட்ட பையிலிருந்த பொருட்களை வெளியே எடுத்துப் போட்டாள் அந்தப் பெண். முதலில் வேண்டாம் என்று மறுத்தவளை அவர்கள் விட்டதாக இல்லை.

"பாருங்கோ அக்கா", என்று மரக்கறி நறுக்கும் பல வகையான கத்திகள் இருந்த கத்தி செற் ஒன்றைச் சந்திராவின் கையில் திணித்தாள் அவள்.

பலவந்தமாகத் திணிக்கப்பட்ட அந்தக் கத்தி செற்றிற்காகச் சந்திரா 1000 ரூபாவைக் கொடுக்க வேண்டியிருந்தது. "அக்கா! நீங்கள் நல்ல புத்திசாலி. பாருங்கோவன். இனி இதை நீங்கள் கடையிலை வாங்கிறதெண்டால் ரூபா. 1500 ஐக் குடுக்க வேண்டி வரும்" என்றவாறு சந்திராவுக்குக் குழையடித்துவிட்டு அவர்கள் இருவரும் சென்றுவிட்டனர்.

இருவாரம் கழித்துச் சந்திராவின் உறவுப் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பக்கம் இருப்பவர், வீட்டுக்கு வந்தார். கதை இடை நடுவே இந்தக் கத்திச் சமாச்சாரமும் வர சந்திரா அவருக்குக் கத்தி செற்றைக் காட்டினாள். அவள் சந்திரா கொடுத்த விலையைக் கேட்டவுடன் மூக்கில் விரலை வைத்துவிட்டுச் சொன்னாள் "உந்த விலைக்கு இது மாதிரி இரண்டை வேண்டலாம். விசரி உன்னை ஆரோ ஏமாத்திப் போட்டினம்" என்றதுதான் சந்திரா ஒடி விழித்தாள்.

நேரடியாகப் பொருட்களை விற்கிறோம் என யாழ்ப்பாணத்தில் ஒரு நிறுவனம் செயற்படுகிறது. இவர்கள் கிராமத்தவர்களை குறிவைத்தே தங்கள் செயல்களை அரங்கேற்றி வருகின்றன. மிகவும் பிற்போக்கான அடிப்படைகளை – அதிலும் குறிப்பாக இரக்கத்தை




ஏற்படுத்தும் செயல்களை தங்களின் தூண்டிலாக வைத்து இயங்குவதுதான் இதுபோன்ற நிறுவனங்களின் மூலதனம்.

இவர்கள் பாடசாலைகளில் சாதாரண தர அல்லது உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றியவர்கள் அல்லது தோற்றி அடுத்த கட்ட உயர்கல்வியைத் தொடராதவர்களையே தமது பணியாளர்களாகக் குறி வைக்கின்றனர். விளம்பரங்கள் மூலம் அல்லது ஏற்கனவே தம்மிடம் பணியாளர்களாக இருப்பவர்கள் மூலம் இதற்கு ஆட்சேர்ப்பைச் செய்கின்றனர். நல்ல வாய் வன்மை மட்டும் இருந்தால் போதும். மிகுதியை அவர்கள் பார்த்துக் கொள்வர்.

நேரடி வியாபாரத்தை எப்படிச் செய்வது என்று ஒரு சிறு பயிற்சி அவர்களுக்கு உண்டு. இதை அங்கு கடமையாற்றும் மூத்த பணியாளர்கள் வழங்குவர். பயிற்சி என்பதை நீங்கள் பெரிதாக எண்ண வேண்டாம். பொய் பேசி மக்களை எப்படி ஏமாற்றுவது என்பதுதான் பயிற்சி. பயிற்றுவித்தவர்களை ஏற்கனவே பணியில் உள்ளவர்களோடு விற்பனைக்கு அனுப்புகின்றனர். அவர்களுக்கு அதற்கென்று சீருடை இல்லை. இதனால் மக்களில் இருந்து வித்தியாசமானவர்களாகத் தெரியாது. மக்களோடு மக்களாகத்தான் இவர்கள் கிராமங்களை நோக்கிப் படை எடுக்கின்றனர்.

நீளக் கைசேர்ட், லோங்ஸ், ரை, சப்பாத்து, பெல்ட் என அழகாக ஆடை அணிய வேண்டும். விற்பனைக்கு அனுப்பும்போது ஒரு ஆண், ஒரு பெண் என ஜோடியாகவே அனுப்பப்படுவர். காலை 10 மணி அளவில் புறப்படும் இவர்கள் வந்து யாழ்ப்பாண பஸ்தரிப்பு நிலையத்தில் கூடிப் பிரிகின்றனர். ஆரம்பத்தில், நாள் ஒன்றிற்கு 2-3 பொருட்களை விற்றால் போதும். இவர்களின் இலக்கு முடிந்துவிடும். நாளொன்றுக்கு ரூபா 1000க்கு மேல் இதில் சம்பாதிப்பவர்களும் உண்டு.

இவர்களைப் பணிக்கு அமர்த்தும்போதே "ரூபா 50,000 க்கு மேல் இலகுவாகச் சம்பாதிக்கலாம்" என்ற உறுதிமொழியுடனேயே பணிக்கு அமர்த்துகின்றனர். இந்த வகை நிறுவனங்கள் வேலைவாய்ப்பு விளம்பரங்களை பிரசுரிக்கும்போது இது போன்று கவர்ச்சிகரமான சொற்களை உபயோகிப்பர். இதற்கு காலவரையறை கிடையாது. கவர்ச்சியாக உடை உடுத்து, அதுவும் இளம் பெண்களோடு ஜோடியாகச் சேர்ந்து ஊர் சுற்றும் அதேவேளை உல்லாசமாக இருப்பதற்குப் பணமும் கைக்கு வருகிறது. இதைவிட அந்த வயதை எட்டி இருக்கும் இளம் பிள்ளைகளுக்கு வேறு என்ன வேண்டும்?

இப்படியான வாழ்கையை எப்படி அனுபவிப்பது என்பதைக் கற்றுக் கொடுக்கத் தென்னிந்தியாவின் சின்னத்திரைகள் உண்டு. அதில் பார்ப்பதைப் பயிற்சி செய்ய இது போன்ற பணிகளும் கைவசம் உண்டு. மொத்தத்தில் சொல்லப்போனால் வட பகுதியில் இத்தகைய செயற்பாடுகளினூடாக ஒரு பகுதி இளைஞர்களின் வாழ்க்கை பாழ்படுத்தப்படுகிறது. காலை யாழ்ப்பாண பஸ் தரிப்பில் இவர்களின் ஒன்று கூடலை அவதானித்தவர்களுக்கு இது புரியும். அவர்களின் நடை, உடை, பாவனை மற்றும் பஸ்களில் ஏறி அவர்கள் முடிவிடத்தை அடையும் வரை அவர்களின் சல்லாபங்கள், சிகரட் பாவனை என்று பலவிதமான செயல்களையும் நீங்கள் பார்க்கலாம்.

இப்படி வருகின்றவர்களின் குடும்பத்தவர்கள் பலருக்குத் தங்கள் பிள்ளைகள் என்ன விதமான பணிகளில் ஈடுபடுகிறார்கள் என்ற விபரம் தெரிவதில்லை. இந்தத் தொழிலின் சூட்சுமத்தை அறிந்தவர்களும், இதன் மூலம் தமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படும் என்றும் தெரிந்தவர்களும் நிச்சயம் இப்படியான பணிக்கு அவர்களை அனுப்பமாட்டார்கள். சமூகத்தில் பொருளாதாரத்தில் விளிம்பு நிலையில் இருப்பவர்களே இப்பணிக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள்.

இது போன்ற வாழ்க்கை அனுபவம் அவர்களுக்கு நிச்சயம் புதிதாக இருக்கும். ஆனால் தொலைக்காட்சிகளில், சினமாக்களில், தொடர்களில் பார்க்கின்ற நிழற் காட்சிகளைத் தாமும் அனுபவிக்க, பெற்றுக் கொள்ள இதை அவர்கள் ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொண்டால். அத்தகையதொரு மாயை வாழ்க்கைக்குள் அவர்கள் செல்ல முயற்சிப்பார்கள். ஏனெனில் அவர்களின் வயது அது. இத்தகைய நேரடி விற்பனையாளர்களாகப் பணியாற்றுகின்றவர்கள் நகரத்திலிருந்து தொலை தூரங்களுக்கு அதுவும் கிராம எல்லைகளைத் தொட்டுத் திரும்புவதால் இரவு 9 மணியளவில்தான் வீடு திரும்புவர்.

எனவே அவர்கள் தமது உறவுகளின் பார்வையில்லாது தங்கள் எண்ணப்படி வாழ தாராளமாகச் சந்தர்ப்பங்கள் உண்டு. எனவே பிள்ளைகள் வேலைக்குப் போய் கைநிறையச் சம்பாதிக்கிறார்கள் என்று பெருமைப்படும் பெற்றோர்கள் அவர்கள் சரியான, ஆராக்கியமான அவர்களுக்கும் பாதுகாப்பான வழிகளில் அந்தச் சம்பாத்தியத்தை செய்கிறார்களா? என்று பார்ப்பதும் அவசியம். இது ஒரு குடும்பத்தின் கடமை மட்டுமல்ல ஒரு சமூகத்தின் கடமையும் கூட?




# இணையத்திற்கு வயது 30

உலகில் எந்த மூலையிலிருந்தாலும், நமக்குத் தேவையான தகவலை யாருடைய உதவியும் இல்லாமல் இணையத்தின் மூலம், அதாவது கூகுள் மூலம் தேடித் தெரிந்து கொள்கிறோம். இதற்குக் காரணம் இணையத்தின் தந்தையான ரிம் பேர்னஸ் லீ தான். ஒட்டுமொத்த உலகையும் ஒற்றைத்தளத்தில் இணைத்து வைத்திருக்கும் வேர்ள்ட் வைட் வெப் இற்கு கடந்த 12 ஆம் திகதி 30 ஆவது பிறந்தநாள்.

1989 அம் ஆண்டு ரிம் பேர்னஸ் லீ வேர்ள்ட் வைட் வெப் (WWW) எனப்படும் வலையமைப்பின் மாதிரியைச் சமர்ப்பித்த மார்ச் 12 ஆம் திகதியை இணையத்தின் பிறந்தநாளாகக் கொண்டாடிவருகின்றனர்.

1960 ஆம் ஆண்டிலிருந்து இணையத்தைப் பயன்படுத்தி வந்தாலும், 1989 ஆம் ஆண்டு தொடக்கம்தான் இணையத்துடன் வலைதளத்தைப் பயன்படுத்துகிறோம். தற்போதைய காலகட்டத்தில் மக்களின் தேவைக்கு ஏற்றப்படி, 200 கோடிக்கும் அதிகமான வலைதளங்கள் செயல்பாட்டில் இருக்கின்றன. ஆனால், இவ்வளவு வலைதளத்துக்கும் அடித்தளமாக இருப்பது Info.cern.ch தான். வேர்ள்ட் வைட் வெப் (WWW) வலையமைப்பிற்குப் பின், 1991 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6 ஆம் திகதி உலகின் முதல் வலைதளத்தை ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனம் அதிகாரபூர்வமாக வெளியிட்டது.


இணையத்தில் முதன்முதலாகப் பதிவேற்றப்பட்ட படம்

1989 மார்ச் 12 ஆம் திகதி ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனத்தின் (CERN) ஆய்வாளரான ரிம் பேர்னஸ் லீ வேர்ள்ட் வைட் வெப் (WWW) எனப்படும் வலையமைப்பை சமர்ப்பித்து கடந்த 12 ஆம் திகதியுடன் 30 வருடங்கள் முடிந்துவிட்டன. இணையதளம் பல்வேறு வடிவங்களில் பயன்படுத்தி வந்திருந்தாலும் வேர்ள்ட் வைட் வெப் (WWW) தான் இந்த உலகிற்குப் புதிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. 1989 ஆம் ஆண்டு இவர் உருவாக்கிய மீயுரை (HTTP) திட்டத்தை இணையத்துடன் இணைத்து உலகளாவிய வலை எனும் வேர்ள்ட் வைட் வெப் உருவாக்கி பிரவுசர் மூலம் அணுகும் வகையிலான முயற்சியை மேற்கொண்டார்.

உலக வரலாற்றில் மிகப்பெரிய கண்டு பிடிப்புகளில் ஒன்றாக WWW கருதப்படுகின்றது. 1994ஆம் ஆண்டு CERN நிறுவனத்தை விட்டு வெளியேறிய ரிம் பேர்னஸ் லீ சர்வதேச அளவில் இணையத்தை ஒரே மாதிரியாக உருவாக்க அடிப்படைக் கோட்பாடுகளை வடிவமைக்க World Wide Web Consortium (W3C) என்ற மையத்தைத் தொடங்கினார். அதன் பிறகே Mosaic மற்றும் இன்ரர்நெட் எக்ஸ்புளோர் தேடுதளம் அறிமுகமானது.

இணையத்தில் முதன் முறையாக புகைப்படம் ஒன்றை வலைதளத்தில் 1992 ஆம் ஆண்டு ஜுலை 18ம் திகதி ரிம் அவர்கள் மைக்கல் என்பவரின் உதவியுடன் பதிவிட்டார். அந்தப் புகைப் படம் Les Horribles Cernettes எனப்படும் பேன்ட் குழுவினரின் புகைப்படமாகும்.

இவரின் நோக்கம் என்னவென்றால், 'இணையம் என்பது கலாசாரம் மற்றும் புவியியல் சார்ந்த எல்லைகளைக் கடந்து அனைவரும் ஒருவருக்கொருவர், செய்திகளைப் பரிமாறிக்கொள்ள அனுமதிக்கும் வகையிலான திறந்த மேடையாக இருக்க வேண்டும் என்பதே. ஆனால், இன்றைக்கு சமூக வலைதளங்கள் மூலம், நல்ல நோக்கங்களை நிறைவேற்றினாலும் பயன் படுத்துகின்ற சில தீயவர்களால், இன்றைக்குக் குற்றங்களின் எண்ணிக்கைதான் அதிகரித்துள்ளது. இணையத்தின் பிறந்த நாளையொட்டி ரிம் வெளியிட்ட அறிக்கையில் இன்றைய வலைத்தளங்கள் மூன்று மிகப்பெரிய குறைகளைக் கொண்டிருக்கின்றன என அவர் கூறுகிறார்.

1. ஹேக்கிங், குற்றச் செயல்களுக்கான ஆதரவு மற்றும் ஒன்லைன் தொல்லைகள் போன்றவை அதிகரித்துள்ளது.
2. விளம்பர அடிப்படையிலான வருவாய் மாதிரிகள், போலியான செய்திகள், வணிக ரீதியாகப் போலிச் செய்திகள் வைரலாகப் பரவுவது.
3. தவறான தகவல்கள் மற்றும் ஒன்லைன் சார்ந்த தகவலின் நம்பகத்தன்மை.

இன்றைக்கு இணையத்தில் முதன்மையான வலைதளமாக விளங்கும் கூகுள் நிறுவனம், வேர்ள்ட் வைட் வெப் (WWW)- ஐக் கௌரவிக்கும் விதமாகச் சிறப்பு டூடுல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், பழைய கணினியைப் பின்புலமாகக் கொண்டு இணையத்தை அணுகுவதைப் போல டூடுலை வெளியிட்டுள்ளது.

தற்போது இளைஞர்கள் / இளம்பெண்கள் நேரம் காலம் பார்க்காமல் சமூக வலைதளங்களுக்கு அடிமையாகிக்கொண்டு வருகின்றனர். நம் அன்றாட தேவைக்காக இணையத்தையே நாடிச் செல்கின்றோம். நாம் அனைவரும் இணையத்தின் மூலம் மிகச் சுலபமாகக் கண்காணிக்கப்படுகிறோம். எந்த ஒரு விடயமாக இருந்தாலும் அது இல்லாமல் நாம் வாழவே முடியாது என்ற நிலை வரும்போது, அது மெதுவாக நமக்கு எதிராகத் திரும்பும் என்பதே உண்மை.

**“ உலக வரலாற்றில் மிகப் பெரிய கண்டு பிடிப்புகளில் ஒன்றாக WWW கருதப் படுகின்றது. 1994ஆம் ஆண்டு CERN நிறுவனத்தை விட்டு வெளியேறிய ரிம் பேர்னஸ் லீ சர்வதேச அளவில் இணையத்தை ஒரே மாதிரியாக உருவாக்க அடிப்படைக் கோட்பாடுகளை வடிவமைக்க World Wide Web Consortium (W3C) என்ற மையத்தைத் தொடங்கினார். அதன் பிறகே Mosaic மற்றும் இன்ரர்நெட் எக்ஸ்புளோர் தேடுதளம் அறிமுகமானது. ”**



இணைத்தின் 30 ஆவது அகவையை ஒட்டி கூகுள் வெளியிட்ட சிறப்பு டூடுல்


Happy Birthday to the World Wide Web

# நாசா – ஸ்பேஸ் எக்ஸ் இணைவு விண்வெளியில் புதிய பாய்ச்சல்

> விண்வெளிக்குச் செயற்கைக்கோளை அனுப்புவதைவிட மனிதர்களை அனுப்புவது என்பது பல மடங்கு கடினமானது. மேலும், சிக்கல் நிறைந்தது. செயற்கைக்கோள்களை அனுப்பும்போது மேலே அனுப்புவதற்கு மட்டும் றொக்கெட்டைத் தயார் செய்தால் போதுமானது. ஆனால், மனிதர்களை அனுப்பினால் அவர்களை மீண்டும் பூமிக்குப் பத்திரமாகக் கொண்டு வருவ தற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கும்.

அமெரிக்காவின் விண்வெளிப் பயண வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ். மனிதர்களை சுற்றுலாவாக விண்வெளிக்கு அழைத்துச் சென்லும் டிராகன் விண்வெளி ஓடம் அதன் சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிறது.

விண்வெளியில் பூமியைச் சுற்றி வரும் சர்வதேச விண்வெளி நிலையத்தைக் கட்டமைத் ததில் பல நாடுகளின் கூட்டு முயற்சி இருந்தாலும் அதில் அமெரிக்காவின் பங்கு என்பது கொஞ்சம் அதிகம்தான். அங்கே பராமரிப்பு, ஆய்வு, கட்டமைப்பு எனப் பல பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். அதற்காக சிலர் அங்கே குறிப்பிட்ட நாள் வரை தங்கியிருக்க வேண்டியிருக்கும். அதுவும் நாசா அடிக்கடி விண்வெளிக்கு வீரர்களை அனுப்பி வைக்கும்.



அந்த வேலை நாசாவுக்கு சில வருடங்களுக்கு முன்பு வரை எளிதான ஒன்றாகத்தான் இருந்தது. உலகில் மேம்பட்ட விண்வெளி ஓடங்களில் ஒன்றான ஸ்பேஸ் ஷட்டில் அவர்களிடம் இருக்கும் வரை. ஆனால், பல்வேறு காரணங்களால் அதனை 2011 ஆம் ஆண்டு நிரந்தரமாக ஓய்வுக்கு அனுப்பி வைத்தது நாசா. அந்தச் சமயத்தில் உலகில் விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் திறன் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றிடம் மட்டுமே இருந்தன.

அமெரிக்கா அதன் ஸ்பேஸ் ஷட்டிலுக்கு விடை கொடுத்துவிட்டதால் அந்த எண்ணிக்கை இரண்டாகக் குறைந்தது. நாசாவுக்கு வேறு வழியே இல்லை. இவர்களில் யாராவது ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டியதுதான். ரஷ்யாவின் சோயுஸ் றொக்கெட்டின் நம்பகத்தன்மை அதிகம் என்பதால் அதைத் தெரிவு செய்தது நாசா. அதன் பின்னர் நாசாவின் விண்வெளி வீரர்கள் ரஷ்யாவுக்குப் பயணம் செய்து சோயுஸ் றொக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்று பூமிக்குத் திரும்பினார்கள்.

ஸ்பேஸ் ஷட்டில் ஓய்வு பெற்ற 2011 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாசாவின் விண்வெளி வீரர்கள் அமெரிக்க மண்ணிலிருந்து விண் வெளிக்குச் செல்லவே இல்லை. அது போக சோயுஸ் றொக்கெட்டைப் பயன்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்களும் ஏராளமாக இருந் தன. எனவே அதற்கான மாற்று வழியைத் தேடிக் கொண்டிருந்தது நாசா. அப்போதுதான் அதன் கண்ணில் பட்டது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம்.

விண்வெளிக்குச் செயற் கைக்கோளை அனுப்புவதைவிட மனிதர்களை அனுப்புவது என்பது பல மடங்கு கடினமானது. மேலும், சிக்கல் நிறைந்தது. செயற்கைக்கோள்களை அனுப் பும்போது மேலே அனுப்புவதற்கு மட்டும் றொக்கெட்டைத் தயார் செய்தால் போதுமானது. ஆனால், மனிதர்களை அனுப்பினால் அவர்களை மீண்டும் பூமிக்குப் பத்திரமாகக் கொண்டு வருவ தற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கும்.


எனவே, அதற்காக மிகப் பாதுகாப்பாக அவர்கள் பய ணிக்கும் ஓடத்தை வடிவமைப்பது அவசியம். அப்படி ஒரு விண்வெளி ஓடத்தை பல வருடங்களாகவே உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது ஸ்பேஸ் எக்ஸ். மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பத் தகுந்த இடத்தைத் தேடிக்கொண்டிருந்த நாசாவுக்கு இது சரியான இடமாக இருக்கும் எனத் தோன்றியது. எனவே, நாசா ஸ்பேஸ் எக்ஸ் உடன் கைகோக்க முன் வந்தது. இந்த விண்வெளி ஓடத்தை மட்டும் சரியாக வேலை செய்துவிட்டால், அதன் பின்னர் நாசா ரஷ்யாவை தேடிச் செல்லத் தேவையிருக்காது.

டிராகன் 2 (Dragon 2) என்று பெயரிடப்பட்ட இந்த விண்வெளி ஓடம் பல கட்டங்களாக மேம்படுத்தப்பட்ட பின்னர், அது விண்ணில் பறக்கத் தயாராக இருந்தது. இது கடந்த 2 ஆம் திகதி பால்கன் 9 றொக்கெட் மூலமாக விண்ணில் ஏவப்பட்டது. மனிதர்கள் பயணிப்பார்கள் என்பதால் ஏதாவது விபத்து ஏற்பட்டால் உடனடியாக றொக்கெட்டில் இருந்து தனியாகப் பிரிந்துவிடும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



ஆனால், முதல் முறையாக எந்தவித சிக்கலும் இன்றி சர்வதேச விண்வெளி நிலையத்துடன் சென்று இணைந்தது டிராகன் 2 விண்வெளி ஓடம். உள்ளே ஒரு மாதிரி மனித பொம்மையையும் வைத்து அனுப்பியிருந்தார்கள். விண்ணில் செல்லும்போதும் கீழே வரும்போதும் உடலில் எப்படிப்பட்ட தாக்கங்கள் இருக்கும் என்பதை அறிந்துகொள்வதற்காக மனித பொம்மையில் சென்ஸார்கள் பொருத்தப்பட்டிருந்தன. மேலும், இதில் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குத் தேவையான பொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

ஐந்து நாளுக்குப் பிறகு, பூமியை நோக்கித் திரும்பியது டிராகன் 2 ஓடம். கடந்த வெள்ளிக்கிழமையன்று பத்திரமாகக் கடலில் வந்து




இறங்கியது. இதன் மூலம் விண்வெளிப் பயணத்தில் புதிய அடியெடுத்து வைத்திருக்கிறது ஸ்பேஸ் எக்ஸ். இந்தப் பரிசோதனை முயற்சி வெற்றி பெற்றதால் அடுத்ததாக இதில் மனிதர்கள் பயணிக்க உள்ளார்கள். இந்த ஓடத்தில் அதிகபட்சமாக ஏழு விண்வெளி வீரர்கள் பயணிக்க முடியும். இதில் முதலில் பயணிக்கவிருக்கும் விண்வெளி வீரர்களையும் தேர்ந்தெடுத்துவிட்டது நாசா.

அடுத்த ஜுன் மாதம் மீண்டும் இந்த விண்வெளி ஓடம் பரிசோதனைக்காக விண்ணில் ஏவப்படும். அதிலும் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை என்றால் அவர்கள் இருவரையும் இதன் மூலமாக ஜுலை மாதம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ●



# தொற்று நோய்களின் உலகம்! 12



வி.ராமசுப்பிரமணியன்,
தொற்றுநோய் சிறப்பு மருத்துவர்.

காசநோய் குறித்தும், 'பென்சிலின்' என்ற அன்டிபயோடிக் மருந்து கண்டுபிடிக்கப்பட்ட சூழல் குறித்தும் கடந்த இதழில் பார்த்தோம். காசநோய் பற்றி நிறையப் பேச வேண்டியிருக்கிறது. இந்த நோயை, 'எலும்புருக்கி நோய்' என்று தமிழில் குறிப்பிடுவார்கள். உண்மையில், மிகவும் கொடூரமான நோய்தான் அது. 'பாவம் செய்தவர்களுக்குத்தான் இந்த நோய் வரும்' என்று ஒரு காலத்தில் மக்கள் நம்பினார்கள். அது கிருமியால் வரும் நோய் என்று நிரூபித்தவர் றொபேர்ட் கொக்

காசநோய் வந்தால் இருமல் வரும்... சளி வரும்... இளைப்பு வரும். ஆனால், அவை மட்டும்தான் அறிகுறிகளா? காசநோய் என்பது நகம், முடி தவிர உடம்பில் எந்த உறுப்பை வேண்டுமானாலும் பாதிக்கலாம். நுரையீரலில் பாதிப்பு ஏற்பட்டால் மட்டுமே இருமல் வரும். 60 முதல் 70 வீதம் நுரையீரலில் காசநோய் வரலாம். 30 முதல் 40 வீதம் கண், மூளை, தொண்டை, நெறி, மூட்டுகள், குடல், சிறுநீரகம்... எங்கே வேண்டுமானாலும் வரலாம்.

எந்த உறுப்பைக் காசநோய் பாதிக்கிறதோ அதற்கேற்பவே அறிகுறிகள் வெளிப்படும். மூட்டில் காசநோய் வந்தால் இருமல் வராது. சளியோடு சேர்ந்து இரத்தம் வராது. மூட்டில் வலியெடுக்கும். செயல்பாடுகள் பாதிக்கும். நுரையீரலில் இருக்கும் காசநோயை எளிதில் கண்டுபிடித்து விடலாம். அதற்குரிய அறிகுறிகள் குறித்துப் பரவலாக விழிப்புணர்வு இருக்கிறது. ஆனால், உடம்பில் வேறெந்த உறுப்பிலும் காசநோய் தாக்கினால் அவ்வளவு எளிதில் கண்டுபிடிக்க முடியாது. என்னென்ன அறிகுறிகள் தெரிகின்றனவோ அவற்றை வைத்துக் கூடுதலாகச் சில பரிசோதனைகள் செய்துதான் முடிவுக்கு வரமுடியும்.

ஒருவருக்குக் காசநோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிய 'மேன்டாக்ஸ் டெஸ்ட்' (Mantoux Test) என்று ஒரு டெஸ்ட் உண்டு. காசநோய்க் கிருமிகளை எடுத்து, அவற்றைச் செயலிழக்கச் செய்து, யாரைப் பரிசோதிக்க வேண்டுமோ அவருடைய உடம்பில் ஏற்றுவார்கள். அவருடைய உடம்பு இதற்கு முன்பு காசநோய்க் கிருமிகளைச் சந்தித்திருந்தால் அவருடைய உடம்பில் ஒரு எதிர்வினை ஏற்படும்,

உடம்பில் இருக்கிற நோய் எதிர்ப்பு சக்தி, அந்தக் கிருமிகளை எதிர்த்துச் சண்டையிடும். அதனால் ஏற்படும் விளைவு அது. பத்து மில்லி மீற்றருக்கு மேல் அந்த எதிர்வினை வந்தால் அந்த நபரின் உடம்புக்குக் காசநோய்க் கிருமிகள் புதிதல்ல, ஏற்கெனவே உள்ளே வந்திருக்கின்றன என்று கண்டுபிடித்துவிட முடியும். ஆனால், இப்போது அவருக்குக் காசநோய் இருக்கிறதா என்பதை இந்தச் சோதனையில் கண்டறிய முடியாது.

எனக்கு இதுவரை காசநோய் வந்ததில்லை. ஆனால் தினமும் காசநோய் பாதித்த இருவரையாவது பார்க்கிறேன். சிகிச்சையளிக்கிறேன். எப்போதோ சில காசநோய்க் கிருமிகள் என் உடலில் புகுந்திருக்கலாம். அந்தக் கிருமிகளை என் உடம்பில் உள்ள எதிர்ப்பு சக்தி அடக்கித் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். அதனால் என்னை அந்தக் கிருமிகள் பாதிக்கவில்லை.

இப்போது எனக்கு 'மேன்டாக்ஸ்' சோதனை செய்தால் எதிர்வினை இருக்கும். அதனால் எனக்குக் காசநோய் இருக்கிறது என்று பொருளல்ல. கிருமி உடம்புக்குள் போயிருக்கிறது. எதிர்ப்பு சக்தி அவற்றைச் சந்தித்து அடக்கி வைத்திருக்கிறது என்பதுதான் அந்த வெளிப்பாடு. பெரும்பாலானோர், 'மேன்டாக்ஸ்' டெஸ்ட்டில் 'பொசிட்டிவ்' என்று வந்தால், 'காசநோய் வந்து விட்டது, மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று நினைக்கிறார்கள் அது தவறு. 50 வீதத்துக்கும் அதிகமானோருக்கு இந்த 'மேன்டாக்ஸ் டெஸ்ட்' பொசிட்டிவ்வாகத்தான் இருக்கும். அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தி குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இப்போது இன்னும் கொஞ்சம் நவீனமாக 'ரீபி கோல்ட் டெஸ்ட்' (TB Gold Test) என்று ஒரு டெஸ்ட் வந்திருக்கிறது. பெரிய வித்தியாசமில்லை. 'மேன்டாக்ஸ்' எப்படியோ அப்படித்தான். ஒரே வித்தியாசம், இது இரத்தத்தை எடுத்துப் பரிசோதிப்பது. 'மேன்டாக்ஸ்', ரிபி கோல்ட் டெஸ்ட்' மட்டுமல்ல... பொதுவான எந்த ஒரு சோதனை மூலமும் ஒருவருக்குக் காசநோய் வந்திருக்கிறது என்பதை உறுதிப்படுத்தவோ, வரவில்லை என்று மறுக்கவோ முடியாது. பிறகு எப்படிக் கண்டுபிடிப்பது?

**அடுத்த இதழில் பார்ப்போம்.**



# விண்வெளி நடைக்கு தயாராகும் பெண்கள்

நாசாவின் பெண்களுக்கான முதல் பிரத்தியேக விண்வெளி நடை (Space walk) வரும் 29 ஆம் திகதி நடைபெறுகிறது. விண்வெளி நடை என்றால் என்ன தெரியுமா...? புவியின் மேற்பரப்பிலிருந்து சுமார் 100 கி.மீ. தொலைவில் உள்ள வெற்றிடத்தைத்தான் விண்வெளி (ஸ்பேஸ்) என்கிறோம். விண்வெளி ஆய்வு நிலையத்துக்கு வெளியே உள்ள இடங்களில், விண்வெளி வீரர் செயற்படுவதே விண்வெளி நடையாகக் கருதப்படுகிறது. சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்துக்கு வெளியே புதிய பாகங்களை இணைக்கவோ, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவோ, விண்வெளி வீரர்களால் விண்வெளி நடை மேற்கொள்ளப்படும். இதற்குக் கடுமையான பயிற்சி தேவை.

இப்போது, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நாசா அண்மையில் அறிவிப்பை வெளியிட்டது. விண்வெளி வரலாற்றில் முதல் முறையாகப் பெண்கள் மட்டுமே பங்குபெறும் விண்வெளி நடைக்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக, நாசா அறிவித்துள்ளது. இதற்காக, இரண்டு விண்வெளி வீராங்கனைகள தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

> **விண்வெளி ஆய்வு நிலையத்துக்கு வெளியே உள்ள இடங்களில், விண்வெளி வீரர் செயற்படுவதே விண் வெளி நடையாகக் கருதப்படுகிறது. சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்துக்கு வெளியே புதிய பாகங்களை இணைக்கவோ, பரா மரிப்புப் பணிகள் மேற் கொள்ளவோ, விண் வெளி வீரர்களால் விண்வெளி நடை மேற்கொள்ளப்படும். இதற்குக் கடு மையான பயிற்சி தேவை.**

அன்னி மெக்ளைன் (Anne McClain) மற்றும் கிறிஸ்டினா கோச் (Christina Koch) ஆகியோர் 29 ஆம் திகதி 7 மணி நேர extravehicular பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

இவர்கள் இருவரும் நாசாவைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனைகள். இவர்களை கனடா விண்வெளி நிறுவனம் மற்றும் நாசா விமானக் கட்டுப்பாட்டு அதிகாரி கிறிஸ்ரன் பெசிகோல் ஆகியோர் பூமியிலிருந்து வழிநடத்துவார்கள்.

மெக்ளைன், டிசம்பர் 2018 முதல் சர்வதேச விண்வெளி மையத்தில் இருக்கிறார். கிறிஸ்டினா கோச், ரோச்கோஸ்மோஸ் சோயுஸ், விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்தைச் சென்றடைந்துள்ளார். இருவருக்குமே இது முதல் விண்வெளி நடையாகும். இதற்கு முன்னரும் பெண்கள் விண்வெளி நடை மேற்கொண்டுள்ளனர். ஆனால், இரு பெண்கள் இணைந்து விண்வெளியில் நடப்பது இதுவே முதல்முறை.

# நில் என்பதற்கு எது எதிர்ச்சொல்



## சொல்லேர் உழவு - 22

கவிஞர் மகுடேசுவரன்

## நட என்பதா, அமர் என்பதா?

ஒரு சொல்லினை நினைத்தால் அது சார்ந்த அனைத்துச் சொற்களையும் நினைவுபடுத்திப் பார்ப்பது சொற்களைப் பற்றிய திளைப்பில் இன்றியமையாத பகுதி. இறைதொண்டர் எனில் அவர் தமக்கு ஒய்ந்த நேரத்திலும் வாய்த்த நேரத்திலும் இறை பண் பாடுவதிலோ முணுமுணுப்பதிலோ ஈடுபட்டிருப்பார். சொற்களைத் தொடர்ந்து எண்ணிக் கொண்டிருப்பதும் அத்தகைய செயலே. நமக்கு ஓய்ந்த நேரத்தில்அச் சொல்லினை நடுவாக வைத்து எல்லாத் திக்குகளிலும் பார்வையைச் செலுத்த வேண்டும் ஒரு சொல்லுக்கு அதன் எதிர்ச் சொல் லைத் தேடுவதும் அவற்றில் ஒன்று.

மேல் என்று ஒன்றிருப்பின் கீழ் என்றும் ஒன்றிருக்கும். தொடக்கம் என்று ஒன்றிருந்தால் முடிவு என்றும் ஒன்றிருக்கும். வடக்கு என்று ஒன்றிருந்தால் தெற்கும் இருக்கும். இவ்வாறு பொருளுணர்த்தும் எல்லாச் சொற்களும் அவற்றுக் குரிய எதிர்ச்சொற்களைப் பெற்றிருக்கும். நமக்கு எல்லாச் சொற்களுக்கும் எதிர்ச்சொற்கள் தெரியுமா? எல்லாச் சொற்களுக்கும் எதிர்ச்சொற்களும் உண்டா ? சில சொற்கள் எதிர்ச்சொற்களைப்போல் தோன்றினாலும் அவை எதிர்ச் சொற்கள்தாமா ? இப்படிப் பல ஆய்வுகளில் மூழ்கலாம்.

எதிர்ச்சொல்லா, எதிர்சொல்லா? இரண்டுமே சரிதான். எதிர்க்கட்சியா எதிர்கட்சியா? இரண்டுமே சரிதான். எப்படி? எதிர் என்பது பெயர்ச்சொல்லானால் எதிர்ச்சொல், எதிர்க்கட்சி என்று வல்லொற்று மிகும். 'எதிரை உணர்த்தும் சொல், எதிரை நிறுவும் கட்சி' என்று இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என்று கொண்டால் அங்கே வலி மிகும். எதிர்த்த கட்சி, எதிர்க்கின்ற கட்சி, எதிர்க்கும் கட்சி என்று வினைத்தொகையாகக் கொண்டால் அங்கே வலிமிகுவதில்லை.

செய்யுளில் முரண்தொடை என்று ஒன்றுண்டு. ஒரு சொல்லுக்கு எதிர்ச்சொல் அமைத்துப் பாடுவது முரணழகைத் தோற்றுவிக்கும். 'அடிக்கிற கைதான் அணைக்கும், அணைக்கிற கைதான் அடிக்கும், இனிக்கிற வாழ்வே கசக்கும், கசக்கிற வாழ்வே இனிக்கும்' என்பதுதான் முரணழகு.

இன்று விளங்கும் புதுக்கவிதைகளுக்கு முன்வடிவான உரைக்கவிதைகளைப் பாரதியாரும் எழுதியிருக்கிறார்.



ஆனால், அவர் எழுதியவை பெரும்போக்கினை உருவாக்கவில்லை. ஐம்பதுகளின் இறுதியில் சி.சு. செல்லப்பாவினால் வெளியிடப்பட்ட எழுத்துச் சிற்றிதழும் அதனைப் பொதுப்போக்காக்கவில்லை. ஆனால், எழுபதுகளில் தோன்றிய வானம்பாடி இயக்கம் புதுக்கவிதைகளை மக்களிடத்தில் கொண்டு சேர்த்தது. கவியரங்குகளுக்குப் பெருந்திரளான மக்கள் வந்தனர்.

வானம்பாடி இயக்கம் புதுக்கவிதையை மக்கள் பரப்பில் கொண்டுபோய்ச் சேர்த்ததற்கு முதன்மைக் காரணம் அவர்கள் தம் கவிதைகளில் எளிய முரண் சொற்களைக் கையாண்டதுதான்.

இரவிலே வாங்கினோம் இன்னும் விடியவில்லை என்பார்கள். இரவும் விடிவும் முரண். அட்சயப் பாத்திரம், பிச்சைப் பாத்திரம் என்றார்கள். பட்டு வேட்டியைப் பற்றிய கனவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்டது என்றார்கள். பட்டு வேட்டியும் கோவணமும் முரண். வரம் சாபம், வசந்தம் இலையுதிர்காலம், கனவு நனவு, ஆண்டான் அடிமை என்று எதிர்ச்சொற்களுக்கிடையே முரண்கோட்டை கட்டினார்கள் வானம்பாடிகள். அந்த முரணீர்ப்பினால் பொதுப்போக்கு ஆகி முன்னிலைக்கு வந்தது புதுக்கவிதை. எதிர்ச்சொற்களின் பொருளுணர்த்தும் ஆற்றல் அத்தகையது என்பதை உணர்த்துவதற்காக இதனைச் சொன்னேன்.

பொய் என்பதற்குப் பொய்யின்மை என்பதும் எதிர்ச்சொல்தான். ஆனால், அது தனித்துயர்ந்து விளங்கும் சொல்லாகாது. பொய் என்பதற்கு மெய் என்பதுதான் நேர்நிகர்த்த எதிர்ச்சொல். ஆங்கிலத்தில் இப்படி ஏதேனும் ஒரு முன்னொட்டினைச் சேர்த்துவிட்டு எதிர்ச்சொல் என்பார்கள். ஹநிநனெயவெ என்பதோடு முன்னொட்டாக In சேர்த்துவிட்டால் Independent என்ற எதிர்ச்சொல் கிடைக்கும். இது குறுக்குவழி என்று நமக்கே தெரிகிறது. தமிழிலும் ஒன்றை எதிர்ச்சொல்லாக்க அல், இல், இன்மை என்று பலவற்றையும் சேர்க்கலாம். சொற்பொருளுக்காக அப்படிச் சேர்ப்போம். அல்வழி, பொறியில், அருளிலி, பொருளிலி என்று கூறுவோம். ஆனால், அவை சிற்றளவே.

சில எதிர்ச்சொற்கள் களிநயமானவை. இது எதிர்ச்சொல்தானா என்று நம்மையே குழப்பும். "ஆணுக்குப் பெண் எதிர்ச்சொல் போலவே இல்லையே... இணைச்சொல் என்றுதானே கூற வேண்டும்? ஒரு தண்டவாளத்துக்கு இன்னொரு தண்டவாளம் எதிராகுமா?" என்று எண்ணுவது இனிய மொழி விளையாட்டாகும். உயர்திணைப் பால் நிலையில் மாற்று நிலை என்ற வழியில் எதிர்ச்சொல் ஆகும். வா என்பதற்குப் போ எதிர்ச் சொல்லாகலாம். நில் என்பதற்கு எதிர்ச்சொல் நட என்பதா, அமர் என்பதா என்று திகைக்கலாம். இரண்டும் உரிய எதிர்ப்பொருள்களைத் தருபவைதாம். ஒரு சொல்லுக்கு உடனே எதிர்ச்சொல் சொல்லத் தெரிந்துவிட்டால் நாம் மொழியாளுமையில் சிறந்து விளங்குகிறோம் என்று பொருள்.

# உலகப் பாரம்பரியம் வேறு இது கூகுளின் ஸ்ரைல்...

இந்த வாரம் கூகுள் வழக்கத்துக்கு மாறான ஒரு விடயத்தை அறிவித்தது. அனைவரும் பாலின பாகுபாடு இன்றி ஒரே மாதிரியான வருமானம்தான் பெறுகின்றனரா என வருடாந்திர ஆய்வு




கூகுளில் மேற்கொள்ளப்பட்டது. இதில் சம்பள இடைவெளி இருக்கும் பெண்களைவிட ஆண்களே அதிகம் எனத் தெரியவந்துள்ளது.

இது எப்போதும் எதிர்மறையாகத்தான் நடக்கும். இது குறிப்பிட்ட மென்பொருள் பொறியாளர் பணியில் அதிகமாக நடந்திருக்கிறது. இதைச் சரிகட்ட ஒரு கோடி டொலர்களை இழப்பீட்டுத் தொகையாக 10,000 ஊழியர்களுக்குப் பிரித்துவழங்க முடிவெடுத்துள்ளது.

'ஒரே பொறுப்பில், ஒரு இடத்தில், ஒரே அளவிலான வேலைபார்த்தும் மற்றவர்களைவிடக் குறைவான சம்பளம் வாங்கியவர்களுக்குக் குறிப்பிடப்பட்ட தொகை சென்றுசேரும். ஆனால், இது நிரந்தரத் தீர்வாக இருக்காது என்பதை நாங்கள் அறிவோம்" என்றார் லாரன் பார்படோ.

இவர்தான் இந்தச் சம்பள விவகாரங்களைக் கண்காணிக்கும் கூகுளின் தலைமை ஆய்வாளர், 'செயற்றிறன், பதவிஉயர்வு மற்றும் பிற மதிப்பீடுகளால் இந்தச் சம்பள இடைவெளி ஏற்பட்டிருக்கலாம். இதைத் தீர்க்க சரியான திட்டங்களை வகுத்து வருகிறோம்" என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# வடகொரியாவுக்காக யுத்தம் புரிந்த சீனா

## கொரியாவின் கதை #17


அமெரிக்க இராணுவம் தென்கொரியாவுக்கு ஆதரவாக சண்டையில் ஈடுபட்டதை சோவியத் யூனியன் கடுமையாக கண்டித்தது. அதையும் மீறி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடுகளின் படை அமெரிக்க இராணுவத்தின் தலைமையில் தென்கொரியாவுக்குள் புகுந்தது. வடகொரியா கைப்பற்றியிருந்த சியோல் நகரை மீட்டது. அதன்பிறகு தென்கொரியா இழந்திருந்த முக்கிய நகரங்களை மீட்டது. வடகொரிய இராணுவம் பின்வாங்கியது. வடகொரியாவை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு சீனாவும் சோவியத் யூனியனும் தள்ளப்பட்டன. ஆனால், சோவியத் யூனியன் இரண்டாம் உலகப்போரில் சந்தித்த இழப்புகளில் இருந்து இன்னமும் மீளமுடியாத நிலையில் இருப்பதாக மாவோவிடம் ஸ்ராலின் தெரிவித்தார்.

சீனாவுக்குப் போர் தளபாடங்களை கடனாக வழங்க முடியும் என்றும், விமானப்படை உதவி உடனடியாக கிடைக்காது என்றும் தெளிவுபடுத்தினார். இதையடுத்து, மாவோ மக்கள் தன்னார்வ படை என்ற பிரிவை உருவாக்கினார். இதற்குள் அமெரிக்கா தலைமையிலான படைகள் வடகொரியாவுக்குள் புகுந்தன. வடகொரியாவையும் சீனாவையும் பிரிக்கும் யாலு ஆற்றை நெருங்கினார்கள். இதை எதிர்பார்த்திருந்த சீன படைகள் யாலு ஆற்றைக் கடந்து அமெரிக்கா தலைமையிலான இராணுவத்தை துவம்சம் செய்தன.

உயிர்கொடைக்கு அஞ்சாத சீனா மற்றும் வடகொரிய மக்கள் இராணுவம் எதிரிகளை விரட்டியடித்தன. வெகு வேகமாக வடகொரியாவிலிருந்து விரட்டப்பட்ட அமெரிக்க இராணுவம் தென்கொரியாவுக்குள் நுழைந்தது. தென்கொரியாவும் கைப்பற்றப்பட்டுவிடும் என்ற நிலை உருவானவுடன், ஐ.நா. சபை சமாதானப் பேச்சுக்கு வந்தது. ஆனால், இரு நாடுகளும் தங்கள் நிலையில் உறுதியாக இருந்தன. இரு நாடுகள் இணைப்பில் வடகொரியா உறுதியாக இருந்தது. அமெரிக்காவின் ஊதுகுழலாக இருந்த தென்கொரியா ஜனாதிபதி வடகொரியாவுடன் இணைய விருப்பமில்லை என்றார்.

இதைத்தொடர்ந்து இரண்டு கொரியாக்களின் எல்லைக்கு இருபுறமும் அமைதிப் பிரதேசம் உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, 1953 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதி கொரியா யுத்தம் முடிவுக்கு வந்தது. இரு தரப்பினரும் போரை முடிவுக்கு கொண்டுவர சம்மதித்து வடகொரியா எல்லை அருகே உள்ள பான்முன்ஜோம் என்ற இடத்தில் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின்படி 250 கிலோமீற்றர் குறுக்களவுள்ள எல்லைக் கோட்டுக்கு இருபுறமும் தலா 4 கிலோ மீற்றர் அகலத்துக்கு பொதுவான இடம் ஒதுக்கப்பட்டது. இராணுவ ரோந்து இல்லாத இந்த பகுதியில் மக்கள் சந்திப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த



உடன்படிக்கைக்கு பின்னர், எல்லைப் பகுதியில் நடந்த அத்துமீறல்களில் தென்கொரிய வீரர்கள் 500 பேரும், அமெரிக்க வீரர்கள் 50 பேரும், வடகொரிய வீரர்கள் 250 பேரும் 1953 முதல் 1999 ஆம் ஆண்டுக்கு இடையில் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகிறது.

இரு கொரியாக்களின் எல்லைப் பகுதியில் இராணுவ ரோந்து இல்லாத பகுதியில் டாயே சங் டோங், கிஜோங் டோங் என்ற இரண்டு குடியிருப்புகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன. இரண்டு குடியிருப்புகளும் 1950 ஆம் ஆண்டு கொரிய யுத்தம் தொடங்க முன்னரே இருந்தவை. அந்தக் கிராமத்தவரின் வாரிசுகள் இந்தக் கிராமங்களில் ஆண்டுக்கு 240 இரவுகள் தங்கி தங்கள் குடியிருப்பை பராமரிக்க அனுமதி அளிக்கப்பட்டது.

தென்கொரிய எல்லைப் பகுதியில் உள்ளது டாயே சங் டோங் கிராமம். தென்கொரியா குடியுரிமை பெற்றவர்களாக இருந்தாலும் கிராமத்தவர்கள் யாரும் தென்கொரிய அரசுக்கு வரி செலுத்தவோ, இராணுவ சேவைகளைப் பெறவோ விலக்குப் பெற்றுள்ளனர். அதேசமயம், வடகொரியா எல்லைப் பக்கம் இருக்கிற கிஜோங் டோங் கிராமத்தில் ஏராளமான வண்ணமயமான பல அடுக்கு மாடி கட்டடங்களும், அடுக்குமாடி குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன.

எல்லையின் இருபுறமும் கூட்டுப் பாதுகாப்புப் படை ஆலோசனைக் கூடங்களை இரு கொரியா அரசுகளும் கட்டியுள்ளன. கொரியா யுத்தத்தில் பங்கேற்ற நாடுகள் மற்றும் கூட்டுப்பாதுகாப்பு நடவடிக்கையில் பங்கேற்றுள்ள நாடுகளின் பிரதிநிதிகள் இந்த கட்டடங்களில்தான் ஆலோசனை நடத்த வேண்டும். இரண்டு கொரியா அரசுகளும் தங்கள் பாரம்பரிய கட்ட்ட வடிவமைப்பிலேயே இந்தக் கட்டடங்களை கட்டியுள்ளன.

எல்லையோரத்திலேயே இரு நாடுகளும் தங்களுடைய பலத்தை வெளிப்படுத்தும் வகையிலும் வளர்ச்சியை பிரதிபலிக்கும் வகையிலும் செயற்படுவது வாடிக்கையான விடயமாகிவிட்டது. 1980களில் தென்கொரிய அரசு தனது நாட்டுக் கொடியை டாயே சங் டோங் கிராமத்தில் பறக்கவிட்டது. 130 கிலோ எடையுள்ள கொடியை 323 அடி உயரமுள்ள கொடி கம்பத்தை கட்டி பறக்கவிட்டது. இதையடுத்து, வடகொரியா தனது எல்லையில் உள்ள கிஜோங் டோங் கிராமத்தில் 525 அடி உயரத்தில் மாபெரும் கொடிக் கம்பத்தை எழுப்பி, 270 கிலோ எடையுள்ள வடகொரியா கொடியை பறக்கவிட்டது. வடகொரியாவின் கொடிக்கம்பம் உலகின் நான்காவது உயரமான கொடிக்கம்பம் என்பது குறிப்பிடத்தக்கது. சவுதி அரேபிய தலைநகர் ஜெடாவில் 558 அடியிலும், தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேயில் 541 அடியிலும், அஜர்பைஜான் தலைநகர் பாகுவில் 531 அடியிலும் கொடிக் கம்பங்கள் இருக்கின்றன.

இரு நாடுகளும் எல்லைப் பகுதிகளில் பல சமயங்களில் அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அதை, போர் நிறுத்த உடன்பாடுக்கு பிறகு இரண்டு கொரியாக்களும் மீண்டெழுந்த கதையோடு சேர்த்தே பார்க்கலாம். போர் நிறுத்த உடன்பாடுக்கு பிறகான முதல் 10 ஆண்டுகள் தென்கொரியா கடுமையாக திணறியது. அமெரிக்காவின் ஆதரவு இருந்தாலும் மக்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தனர்.

கொரியா போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்ட இரண்டே மாதங்களில் தென்கொரியா அரசுடன் அமெரிக்கா அரசு இருதரப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியது. அதன்படி, இரு நாடுகளும் தங்கள் மீது வெளியார் தாக்குதல் நடத்தும் சமயத்தில் இராணுவ ஒத்துழைப்பு அளிக்க வகை செய்யப்பட்டது. தென்கொரியாவில் நிரந்தரமாக அமெரிக்கா இராணுவப் பிரிவை நிறுத்தவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

கொரியா போர் நிறுத்த உடன்பாடுக்குப் பிறகு அமெரிக்கா ஆதரவுடன் ஜனாதிபதி சிங்மேன் ரீயின் ஆட்டம் மீண்டும் தொடங்கியது. பாலியல் தொழில் தென்கொரியாவின் 25 சதவீத கொரியர்களின் வருமானம் ஆகியது. அவர்கள் பெரும்பாலும் அமெரிக்க இராணுவத்தினருக்கு சேவை புரிந்தனர்.

(தொடரும்)

**கொரியா போர் நிறுத்த உடன்பாடுக்குப் பிறகு அமெரிக்கா ஆதரவுடன் ஜனாதிபதி சிங்மேன் ரீயின் ஆட்டம் மீண்டும் தொடங்கியது. பாலியல் தொழில் தென்கொரியாவின் 25 சதவீத கொரியர்களின் வருமானம் ஆகியது. அவர்கள் பெரும்பாலும் அமெரிக்க இராணுவத்தினருக்கு சேவை புரிந்தனர்.**



## வரும் ஆனால்...?

கௌதம் மேனன் இயக்கத்தில் தனுஷ், மேகா ஆகாஷ், சுனைனா, சசிகுமார் எனப் பலர் நடித்த படம் 'எனை நோக்கி பாயும் தோட்டா'.

படத்துக்கு 2018 ஆம் ஆண்டே தணிக்கை சான்றிதழ் கிடைத்தபோதும் படம் வெளியாகவில்லை. இந்நிலையில் இப்போது படம் ஏப்ரலில் வெளியாகலாம் என அதன் தயாரிப்பாளர் அறிவித்துள்ளார்.





## நானே வாய்ப்புக் கேட்பேன்

நடிகை ஸ்ரீதேவியை ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அழகு, திறமை, இனிமையான குரல் என ஒட்டுமொத்தத் திரையுலகையும் கலக்கியவர்.


மர்மமான முறையில் மரணமான இவரின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுக்கப் பலரும் விரும்புகின்றனர். அண்மையில் ராகுல் ப்ரீத் சிங் என்.டி.ஆர். வாழ்க்கை படத்தில் ஸ்ரீதேவியாக நடித்துப் பாராட்டு வாங்கியிருந்தார்.

இந்நிலையில் தமன்னா, 'நான் ஸ்ரீதேவியின் தீவிர ரசிகை. அவரது வரலாற்றைப் படமாக எடுத்தால் நானே சென்று வாய்ப்புக் கேட்பேன்", எனக் கூறியிருக்கிறார் தமன்னா.

## தமிழுக்கு தயங்கும் நிவேதா?

பாபநாசம், ஜில்லா படங்களில் நடித்தவர் நிவேதா தாமஸ். படிப்பதற்காக நடிப்புக்கு இடைவெளி விட்டவர். இப்போது மீண்டும் நடிக்கத் தொடங்கி விட்டார்.


இந்த ஆண்டில் 3 படங்களில் நடிக்கவுள்ளார். மூன்றுமே தெலுங்குப் படங்கள்தான். தெலுங்கில் நாயகி வேடமும் அதிக சம்பளமும் கிடைப்பதால் தமிழ் பட வாய்ப்புகளை நிராக்கிறாராம். ஆனால் அவர் இந்தக் கருத்தை மறுத்துள்ளார்.



## பாணியை உடைக்கும் அஜித்

பொதுவாக வசனங்களை இழுத்துப் பேசுவதுதான் அஜித்தின் பாணி. இதை நேர்கொண்ட பார்வை படத்தில் உடைந்தெறிந் திருக்கிறார்.

பிங்க் படத்தின் மீளுருவாக்கமாக உருவாகும் இந்தப் படத்தில் பாதிக்கப்பட்ட 3 பெண்களுக்கு சாதகமான தீர்ப்பை பெற்றுக் கொடுப்பதே கதை. நீதிமன்றக் காட்சிகளில் படம் அசத்தலாகப் பேசியதால் திட்டமிட்ட நாள்களை விட முன்னராகவே படப்பிடிப்பு முடிந்து விட்டது. இனி இறுதிக்கட்ட பணிகள்தான் மிச்சமுள்ளன. இதனால் திட்டமிட்டபடி மே 1 இல் படம் வெளியாகும்.



## இது போட்டிக் கவர்ச்சி

நடிகைகள் எப்படித்தான் நட்புடன் பழகினாலும் அவர்களுக்குள் ஒரு போட்டி இருக்கும். காஜல் அகர்வாலும் சமந்தாவும் அப்படி நண்பர்கள்தான். ஆனால், இவர்கள் இருவருக்குள்ளும் சமூகவலைதளத்தில் கடும் போட்டி நிலவுகிறது.

சமந்தாவை இன்ஸ்ராகிராமில் 60 இலட்சத்துக்கும் அதிகமானோரும், டுவிட்டரில் சுமார் 73 இலட்சம் பேரும் பின் தொடர்கிறார்கள். இதேபோல் காஜல் அகர்வாலை இன்ஸ்ராகிராமில் 90 இலட்சம் பேரும் டுவிட்டரில் 20 இலட்சம் பேரும் பின்தொடர்கிறார்கள்.

ரசிகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவே இருவரும் கவர்ச்சிப் படங்களை பதிவிடுகிறார்கள். இன்ஸ்ராகிராமில் ரசிகர்கள் அதிகமாவதற்கு ஏற்ப அவர்களுக்கு வருமானமும் எகிறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கவர்ச்சி சகோதரிகள்

திரையுலகில் சகோதரிகளின் ஆதிக்கம் எப்போதும் அதிகம் இருந்திருக்கிறது. சோலோ படத்தின் நாயகி நேஹா சர்மாவின் தங்கை அயிஷா சர்மாவையும் திரையுலகுக்கு அழைத்து வருகிறார்.

உடலை எப்படி கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டும் உன்று அவர் தங்கைக்கு அறிவுரை வழங்கி அவருக்கு பயிற்சியும் வழங்கி எடுத்த செல்பியை வலைதளத்தில் பதிவு செய்துள்ளார். இதற்குப் பலவாறான கருத்துக்கள் பதிவாகியுள்ளன.







தமிழ், தெலுங்கு சினிமாவில் நடிகர்களுக்கு இணையான நடிகை என்று பெயர் வாங்கியவர் அனுஷ்கா ஷெட்டி. இவரது உண்மையான பெயர் ஸ்வீட்டி ஷெட்டி.

தெலுங்கு படங்களில் அதிகம் நடிப்பதால் இவரது தாய்மொழி தெலுங்கு என்றே பலரும் நினைக்கிறார்கள். ஆனால், இவரின் தாய்மொழி 'துளு'.

'சூப்பர்' என்ற தெலுங்கு படத்தில் நாயகியாக அறிமுகமான அனுஷ்காவை, தமிழில் 'ரெண்டு' படத்தில் அறிமுகப்படுத்தியவர் இயக்குநர் சுந்தர் சி. இந்தப் படத்தில் நடிகர் மாதவனுக்கு ஜோடியாக நடித்தவர், தற்போது 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அவருடன் சேர்ந்து நடிக்கவுள்ளார்.


கணனிப் படிப்பில் பட்டம் பெற்ற இவர், ஒரு வருடம் பூகோள ஆசிரியராகப் பணிபுரிந்தார். பிறகு யோகா ஆசிரியரானார். இவரது யோகா குரு, நடிகை பூமிகாவின் கணவர் பரத் தாகூர்.

'இஞ்சி இடுப்பழகி' படத்துக்காக, தனது உடல் எடையைத் திடீரென்று 18 கிலோ வரை அதிகரித்தார். படத்துக்காக இப்படி இவர் மெனக்கெடுவதைப் பார்த்து சினிமா உலகமே வியக்கிறது.

'சினிமாவில் உங்களுக்குப் போட்டியாக யாரை நினைக்கிறீர்கள்...' என்று கேட்டால், 'எனக்குப் போட்டி நான் மட்டுமே' என்று சொல்லி கண்சிமிட்டுவாராம், அனுஷ்கா.

அனுஷ்காவின் ரசிகர் ஹேம்சந்த் என்பவரால் பேஸ்புக்கில் அனுஷ்கா பெயரில் ஒரு பக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அவரே அந்தப் பக்கத்தை நிர்வகித்து வந்த நிலையில், அனுஷ்கா தனது ஒரு பிறந்தநாளின்போது அதை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதன் பின்பு இந்தப் பக்கத்தில் இலட்சக்கணக்கான ரசிகர்கள் இணைந்தனர். தற்போது இந்த பேஸ்புக் பக்கத்தின் லைக்ஸ் கோடியைத் தாண்டியுள்ளது.

பிரெட்ரிக் டக்ளஸ்



தொடர் 07

# ஓர் அடிமையின் விடுதலைப் போர்

அடிமையாக நான் இருந்த போது இந்தக் கரடுமுரடான ஒத்திசைவற்ற பாடல்கள் பற்றி ஆழமான பொருளைப் புரிந்து கொண்டிருக்கவில்லை. எதையெல்லாம் பார்த்திருக்கவும் கேட்டிருக்கவும் வேண்டுமோ அதையெல்லாம் பார்க்காமலும் கேட்காமலும் இருக்கும்படியான ஒரு வட்டத்துக்குள் நான் இருந்தேன். அவர்கள் சொன்ன துயரக்கதை என் எளிய அறிவுக்கு எட்டாததாக இருந்தது. அந்தக் குரல்கள் உரத்தவை: நீண்டொலிப்பவை ஆழம் கொண்டவை. கசப்பான துயரத்தில் தகிக்கும் ஆன்மாக்களின் மன்றாடல்களையும் பிரார்த்தனைகளையும் மூச்சாகக் கொண்டவை.

ஒவ்வொரு குரலும் அடிமைத்தளைக்கு எதிரான சாட்சியாகும். அதிலிருந்து விடுவிக்க வேண்டி கடவுளைக் கோரும் பிரார்த்தனையாகும். அந்த முரட்டு இசையை நான் கேட்கும்போதெல்லாம் என் மனம் சோர்வடைந்து என்னை சொல்லொணாத் துயரில் அமிழ்த்தி விடும். அதைக் கேட்கும் வேளைகளில் நான் கண்ணீர் விட்டு அழுவேன். இப்போது அந்தப் பாடலை நினைப்பதும்கூட என்னைத் துன்புறுத்துகிறது. இப்போது இந்த வரிகளை நான் எழுதும்போதுகூட என் உணர்ச்சிப் பெருக்கு கன்னங்களில் இறங்கத் தொடங்கி விட்டது.

அடிமைத்தனத்தின் மனிதாபிமானமற்ற தன்மையைக் குறித்த என் கருத்துக்களின் மங்கலான தடயங்களை அந்தப் பாடல்களில்தான் காண்கிறேன். அந்த எண்ணத்தை என்னால் ஒருபோதும் ஒதுக்கிவிட முடியாது. அடிமைத்தனத்தின் மீது நான் கொண்டுள்ள வெறுப்பை ஆழப்படுத்தவும் என் அடிமைச் சகோதரிகளின்பால் நான் கொண்டிருக்கும் பரிவைத் தீவிரப்படுத்தவும் அந்தப் பாடல்கள் இன்றும் என்னைத் தொடர்கின்றன.

ஆன்மாவை வதைக்கும் அடிமைத்தளையின் தாக்கங்களை எவரேனும் அறிய விரும்பினால், உணவுப் படிக்கான நாளன்று கேணல் லொய்ட்டின் பண்ணைக்குச் சென்று அடர்ந்த பைன் மரக்காடுகளிடையே, மௌனமாக, தன் ஆன்மாவை ஊடுருவிக் கடக்கும் ஒலிகளை அவதானிக்கட்டும் – அப்போதும் அவனால் எதையும் உணர்ந்துகொள்ள முடியவில்லை என்றால், அவன் இதயம் தசைகளால் ஆனதல்ல.

நான் வட அமெரிக்காவுக்கு வந்த நாளிலிருந்து, அடிமைகளின் பாடல்கள் அவர்களுடைய திருப்தியையும் சந்தோசத்தையும் சொல்வதன் சாட்சியே என்று சொல்பவர்களைக் கண்டு பலத்த அதிர்ச்சியுற்றதுண்டு. இதை விடவும் ஒரு பெரும் தவறை நினைத்துப் பார்ப்பதென்பது சாத்தியமற்றது. கடும் துயரத்தில் இருக்கும்போதே அடிமைகள் நிறையப் பாடுகிறார்கள்.

ஓர் அடிமையின் பாடல் அவன் இதயத்தின் துயரத்தை மறக்க அடிக்கடி பாடியதுண்டே ஒழிய சந்தோசத்தைக் கொண்டாட ஒருபோதும் பாடியதில்லை. சந்தோசத்தில் அழுவது, சந்தோசத்தில் பாடுவது என்பதெல்லாமே அடிமைத்தளையில் நான் இருந்தபோது அறியாதது. தனித்த தீவொன்றில் கைவிடப்பட்ட ஒருவனின் திருப்திக்கான, சந்தோசத்திற்கான சாட்சியாக அவனது பாடலைக் கொள்ள முடியுமென்றால் அடிமையின் பாடலையும் அவ்வாறே வைத்துக் கொள்ளலாம் – அவனது பாடலும், அடிமையின் பாடலும் ஒரே உணர்ச்சியினால் பிறந்தவையே!

• • •

ஒரு பெரிய அழகான தோட்டத்தை வைத்திருந்தார் கேணல் லொய்ட். தலைமைத் தோட்டக்காரர் டர்மண்டைத் தவிர மேலும் நான்கு பேர்களுக்கு அதில் எப்போதும் வேலையிருந்தது. அந்தப் பிரதேசத்தில் அனைவரையும் கவரக் கூடிய ஒன்றாக அந்தத் தோட்டம் இருந்தது. கோடை காலங்களில் பால்டிமோர், ஈஸ்டன், அனாபோலிஸ் என்று பல ஊர்களிலிருந்தும் இதைப் பார்ப்பதற்கென்று வருவார்கள். வட அமெரிக்காவின் திடமான அப்பிள்களிலிருந்து தென்னமெரிக்காவின் சுவையான ஒரேஞ் வரை எல்லாவிதமான பழவகைகளும் இங்கு ஏராளமாக இருந்தன.

பண்ணையில் இது தொல்லைகளுக்குக் காரணமாகவும் இருந்தது. இதனுடைய சுவையான பழங்கள், கேணலின் பண்ணையைச் சேர்ந்த பசித்த சிறுவர் கூட்டத்திற்கும் முதிர்ந்த அடிமைகள் சிலருக்கும் பெரும் ஆவலைத் தூண்டக்கூடியவையாய் இருந்தன. வெகுசிலரே அத்தகைய ஆவலைக் கட்டுப்படுத்தும் விவேகம் கொண்டிருந்தனர். பழங்களைத் திருடியதற்காக அடிமைகள் சிலர் கசையடி பெறாமல் கோடை காலங்களில் ஒருநாளும் கழிந்திருக்காது.

அடிமைகளைப் பழத் தோட்டத்தில் இருந்து விலகியிருக்கச் செய்ய கேணல் எல்லாவிதமான வழிமுறைகளையும் கையாள வேண்டியிருந்தது. கடைசியாக தோட்டத்தைச் சுற்றி நின்ற வேலி முழுவதும் தார் பூசச் செய்தது பலன் கொடுத்தது. அதன்பிறகு அடிமைகள் எவரின் உடலிலாவது தார் படிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் தோட்டத்தில் அவன் நுழைந்ததற்கோ அல்லது நுழைய முற்பட்டதற்கோ அதுவே போதுமான சாட்சியாக அமைந்தது. எப்படியானாலும் தலைமைத் தோட்டக்காரனின் கசையடி அவனுக்கு உறுதியாகக் கிடைத்தது. அதற்கு இந்த. வழிமுறை நல்ல பலன் கொடுத்தது. சவுக்கைக் கண்டு அஞ்சுவதுபோல அடிமைகள் இப்போது தாரைக் கண்டும் அஞ்சினார்கள். கறை பட்டுக்கொள்ளாமல் தாரைத் தொடுவது அசாத்தியமானது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டது போலிருந்தார்கள்.

கேணல் மிக அற்புதமான குதிரை வண்டிகளையும் வைத்திருந்தார். அவரது குதிரை லாயமும் வண்டிகள் நிறுத்தும் இடங்களும் பெரு நகரங்களிலுள்ள பிரமாதமான அமைப்புகளைக் கொண்டிருந்தன. அவரது குதிரைகளும் சிறந்த உடலமைப்பைக் கொண்ட உயர்ஜாதிக் குதிரைகள். அங்கே மூன்று அற்புதமான கோச்சு வண்டிகளும் நான்கு இரண்டு சக்கர வாகனங்களும் இருந்தன. தவிர மிக நவீனமான பாணியில் அமைந்திருந்தன.

தந்தையும் மகனுமான இரண்டு அடிமைகள், மூத்த பர்னி, இளைய பர்னி இந்த வண்டிச் சாலையைப் பராமரிக்க வேண்டியிருந்தது. அவர்களது மொத்த வேலையுமே இதைப் பார்த்துக் கொள்வதுதான். ஆனால் சுலபமான வேலையல்ல. குதிரைகளைக் கவனித்துக் கொள்வதில் கேணல் காட்டும் அக்கறையை வேறெதிலும் காட்டியதில்லை. பராமரிப்பில் இம்மியளவு கவனப் பிசகும்கூட மன்னிக்க முடியாதது. அவ்வாறு நேர்ந்தால் அதற்கு யார் பொறுப்பாளிகளோ அவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும். குதிரைகளைக் கவனிக்க வேண்டிய தேவையுள்ளது என்று கேணலுக்கு சந்தேகம் வந்துவிட்டாலும்கூட எந்த சமாதானமும் அவர்களைக் காப்பாற்ற முடியாது.


அவ்வாறான சந்தேகங்கள் கேணலுக்கு அடிக்கடி வரும் என்பதே மூத்த பர்னிக்கும் இளைய பர்னிக்கும் பராமரிப்பு வேலையைப் பெரிதும் கடினமாக்கியது. தண்டனையின்றி எப்போது தப்புவார்கள் என்பதே அவர்களுக்குத் தெரியாது. தண்டனை வேண்டாத சந்தர்ப்பங்களின்போது கடுமையான கசையடிகளுக்கு உள்ளாவதும், கட்டாயம் தண்டனை அடைந்தாக வேண்டிய சமயங்களில் கசையடியிலிருந்து தப்பிவிடுவதும்கூட நடக்கும்.

இவை எல்லாமே கேணலின் உபயோகத்துக்கென அவருக்கு முன்பாக குதிரைகளைக் கொண்டு வந்து நிறுத்தும்போது அவருக்கு உள்ள மனநிலையையும், குதிரைகளின் தோற்றத் தையும் பொறுத்தது. குதிரை குறித்த வேகத் தில் ஓடாமல் போனாலோ தலையைத் தூக்கிக் கொண்டு விட்டாலோ அது பராமரிப்பாளர்களின் தவறு காரணமாகத்தான் என்று ஆகிவிடும்.

(போர் நீளும்)

குதிரைகளைக் கவனித்துக் கொள்வதில் கேணல் காட்டும் அக்கறையை வேறெதிலும் காட்டியதில்லை. பராமரிப்பில் இம்மியளவு கவனப் பிசகும்கூட மன்னிக்க முடியாதது. அவ்வாறு நேர்ந்தால் அதற்கு யார் பொறுப் பாளிகளோ அவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும். குதிரைகளைக் கவனிக்க வேண்டிய தேவையுள்ளது என்று கேணலுக்கு சந்தேகம் வந்து விட்டாலும்கூட எந்த சமாதானமும் அவர்களைக் காப்பாற்ற முடியாது.

## ஆட்டோசங்கரின் கதை



# ஆட்டோ சங்கர் வீட்டு கிரகப்பிரவேசம் வந்த வி.ஐ.பிகள்

### இந்தியாவை உலுக்கிய ஒரு சீரியல் கில்லரின் வாக்குமூலம் 23

தேவியுடன் சேர்ந்து கூத்தடித்தேன். என்னிடம் பெண் கேட்டு வரும் ஸ்திரிலோலர்களில் அதிக திடம் அதிக சக்தி வாய்ந்த ஆசாமிகளை அனுப்பி வைத்தேன்! அவளுக்கும் பரம திருப்தி. அந்த வாட்சாட்டன்களிமிருந்து நமக்கும் வசூல்! ஒரு கல்லில் ரெண்டு மாங்காய். சென்னையிலிருந்த இளம் நீக்ரோக்கள் நெல்சன் மண்டேலாவை விட அதிகம் நேசித்தது அந்த பெண்மணியைத்தான்!

பெரியார் நகரில் புதுசாக வீடு கட்டி, கிரகப்பிரவேசத்துக்கு அத்தனை முக்கிய பொலிஸ் அதிகாரிகளும் ஆஜர் ஆகியிருந்தனர். ரிபன் வெட்டி வீட்டைத் திறந்து வைத்தது டி.எஸ். பி.தங்கய்யாதான்! நம்ப அம்மையார் குத்து விளக்கு ஏற்றி வைக்க ஏகதடபுடல். சங்கரது சாராய வியாபாரத்தை விளக்கேற்றி தொடங்கி வைத்தது போலவே கிரகப்பிரவேசத்துக்கும் தவறாமல் கலந்து கொண்டனர் பொலிஸார்!

அவர்களைச் சொல்லி தவறே இல்லை: காவல்துறை என்று பெயரே தவிர, யாருக்குக் காவல் என்று சொல்லவில்லையே? சாராய வியாபாரிகளுக்கும், மாமாக்களுக்கும் நாம்தான் காவல் காக்க வேண்டியிருக்கும் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாவம்! நன்றி மறக்காத காவல் துறையினர்!

கிரகப்பிரவேச நிகழ்ச்சிகள் எல்லாமும் வீடியோவில் பதிவாயிற்று. எனக்கு ஒரு கலர் கனவு இருந்தது! என்றைக்காவது சட்டசபைக்குள் எம்.எல்.ஏ.வாக நுழைய வேண்டும் என்ற ராஜ கனவு! அதற்கான அவ்வளவு தகுதிகளும்ட்டு கைவசம் என்றாலும் நேரம்தான் வாய்க்கவில்லை.

எப்படியும் தேர்தல் சமயத்தில் உபயோகப்படும் என்றே எல்லா 'பெரிய மனிதர்களோடும்' பழகினேன்! பெரிய மனிதர்களின் அழுக்கு அந்தரங்கங்களுக்கு- கறுப்பு சிந்தனைகளுக்கு- பயன்பட்டது என் நீலப்பட்டறை! பிற்பாடு தேர்தல் சமயம் அரசியல் வட்டாரத்தில் என் செல்வாக்கைக் காட்டுவதற்காகவே பூரா வி.ஐ.பி.களையும் அதிகாரிகளையும் விழாவுக்குக் கூப்பிட்டேன். வீடியோவில் அவர்களை விழ வைத்தேன். தேர்தல் வருமுன் நான் மட்டும் விழாமல் இருந்திருந்தால் தேர்தல் வெற்றி விழாவும் நடத்தியிருப்பேன்!

அம்மையாரிடம் விளையாடி விட்டு அப்போதுதான் வீடு திரும்பியிருந்தேன். வாசலில் ஜீப் ஒன்று ரயர் தேய வந்து நின்றது. கான்ஸ்டபிள்கள் ரெண்டு பேர் இறங்கி வந்தனர். புருவத்தில் கேள்வி முடிச்சு! 'பெரிய ஐயா' உடனே அவனைக் கூட்டி வர சொன்னாராம். தெரிவித்தார்கள்! எனக்குத் தூக்கி வாரிப் போட்டது!

'பெரிய ஐயா' என்பது அந்த அம்மையாரின் கணவர்! இதுவரை அவரை நேருக்கு நேர் சந்தித்ததில்லை காவல்துறையில் அந்த ஒருவரை மட்டும் நெருங்கவேயில்லை நான்! அவர் மனைவியுடன் பழகி வரும்போது அவரை சிநேகிக்க சங்கடமாயிருந்தது. ஒரு விதமான இடைவெளியை அடைகாத்து வந்தேன், கூச்சம் காரணமாக. அவரிடம் ஆக வேண்டிய காரியங்களை அவள் மூலமாகவே கவனித்துக் கொண்டிருந்தேன்.

இப்போது அவர் கூப்பிட்டார் என்றதும் அதிர்ச்சி! எதற்குக் கூப்பிட்டிருப்பார்! அவர் மனைவியிடம் உள்ள உறவு தெரிந்திருக்குமோ? அதை விசாரிக்கப் போகிறாரோ? மனசுள் பயமுயலொன்று குறுகுறுவென ஓடிற்று. முதுகுத் தண்டில் ஐஸ் நதி வருடினது மாதிரி ஜில்லிட்டது.

# வாங்க...! சும்மா உட்காருங்க...! லட்ச ரூபா சம்பளமா எடுங்க...!!!



உலகம் இப்போது எதிர்கொள்ளும் மிகமுக்கிய பிரச்சினைகளில் ஒன்று வேலையில்லா திண்டாட்டம். பட்டம் பெற்றவர்கள் பலர் வயிற்றுப் பிழைப்புக்காக கூலி வேலைக்கு செல்கிறார்கள்.

இது ஒருபுறம் இருக்க வேலை... வேலை என்று ஓய்வில்லாது ஓடுபவர்களும் வேலைச் சுமை அதனால் ஏற்படும் மன அழுத்தம் தாங்க முடியாது ஓவென்று அழுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதிலும் அரசாங்க வேலைக்காக நம் நாட்டில் என்ன பாடுபடுகிறார்கள் எத்தனை தகிடு தத்தங்கள் செய்கிறார்கள் என்பது நமக்கு நல்லாவே தெரியும்.

சும்மா இருக்க விரும்புபவர்கள் அதிகம்பேர். சும்மா இருந்துவிட்டால் சம்பளம் கிடைக்குமா...? பணம் இல்லாவிட்டால் நம் நிலைமை...?

ஆனால் சும்மா இருப்பதை அரசாங்க வேலையாக்கி, அவர்களுக்கு பதவியுயர்வு, இலட்சத்தில் சம்பளம் என்றால் நம்புவீர்களா...? ஆனால், நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் உண்மை இதுதான்.

சுவீடன் அரசாங்கம் அண்மையில் வேலை குறித்து ஒரு அறிவிப்பை வெளியிட்டது. இந்த வேலைக்கு வருபவர்கள் சுவீடனின் கோதன்பர்ங் ரயில் நிலையத்திற்கு வந்து சும்மா உட்கார வேண்டும் என்பதுதான் வேலையே.

வருபவர்கள் காலை முதல் மாலை வரை அங்கேயே இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. காலையில் வருகையை பதிவு செய்துவிட்டு சென்றுவிடாலம் ஆனால் மீண்டும் மாலையில் செல்வதை பதிவு செய்வது கட்டாயம்.

மேலும் ரயில் நிலையத்தில், வேலைக்கு வருபவர்கள் படம் பார்க்கலாம், புத்தகம் படிக்கலாம், நித்திரை கொள்ளலாம் மற்றும்படி நீங்கள் வேலைக்கு வந்ததை உறுதி செய்தால் போதும். இந்தப் பணி , நிரந்தர அரசாங்க வேலையாம். பிடிக்கவில்லை என்றால் வேலையை ராஜினாமாவும் செய்யலாம்.

இதெல்லாம் விடுங்க... இந்த வேலையை செய்பவர்களுக்க எவ்வளவு சம்பளம் தெரியுமா...? 21 ஆயிரத்து 100 குரோன் அதாவது நம் நாட்டு மதிப்பில் சுமாராக 4 இலட்சம் ரூபா...!

சம்பளம் மட்டுமல்ல வருடாந்திர ஊதிய உயர்வு, விடுமுறை மற்றும் ஓய்வூதியம் அனைத்தும் வழங்கப்படுகிறது. பணியில் இருப்பவர் ராஜினாமா செய்தால் அந்த வேலை இன்னொருவருக்கு வழங்கப்படும்.



# பூச்சிகளும் நம் நண்பர்களே...!

**புதிய தொடர் – 03**

**வயலில் ஏதாவது பூச்சியைப் பார்த்ததும் உடனடியாகப் பூச்சி கொல்லி வாங்க ஓடுபவரா நீங்கள்... அப்படியிருந்தால், உங்களுக்காகத்தான் இத்தொடர்!**

பூச்சிகளால் மனிதர்களுக்கு நன்மைகள், தீமைகள் என இரண்டுமே இருந்தாலும்... அவற்றால் வரும் தீமைகளையும், தீமை செய்யும் பூச்சிகளைப் பற்றியும்தான் நாம் அதிகம் சிந்திக்கிறோம். இது மனித இயல்பு. ஆனால், உலக அளவில் பூச்சிகளில் 0.5 வீதமான பூச்சிகள்தான் தீமை செய்யும் பூச்சிகள்.

இதோடு விளையும் விளை பொருள்களில் 18 வீதத்தை அழிப்பவை, பூச்சிகள்தான். உலகளவில் கிட்டத்தட்ட பத்து லட்சம் வகையான பூச்சிகள் இருக்கின்றன எனப் பார்த்தோம். இவற்றில் தீமை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை சுமார் 5,000 வகைகளைக் கூடத் தாண்டாது. இவ்வளவு சிறிய எண்ணிக்கையில் உள்ள பூச்சிகளைப் பார்த்துத்தான் உலகமே ஆடிக் கிடக்கிறது. 'ஐயோ... பூச்சி பூச்சி' என அலறிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பூச்சிகள் மனிதர்களுக்கு என்ன செய்கின்றன... சூழலுக்கு என்ன செய்கின்றன... என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். மனிதர்கள் வாழுமிடத்தில் இவ்வளவு பூச்சிகள் இருப்பதற்கான முக்கிய காரணம் காடுகள் அழிக்கப்பட்டதுதான். காடுகள் அழிக்கப்படுவதால்தான் காட்டில் உள்ள உயிரினங்கள் வெளியே வருகின்றன. அப்படி முதலில் காட்டைவிட்டு வெளியேறியவை உருவத்தில் சிறிதாக இருக்கும் பூச்சிகள்தான். பெரிய மிருகங்கள் வெளிவந்தால் நம் கண்களுக்கு அவை தெரிந்துவிடும். ஆனால், பூச்சிகள் உருவத்தில் சிறியவை என்பதால் நம் கண்களுக்கு அவை தெரிவதில்லை.

காட்டில் பூச்சிகளால் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஏனெ னில், அங்கு பலதரப்பட்ட தாவ ரங்கள் இருக்கின்றன. சின்னச் செடிகள், குத்துச் செடிகள், கொடிகள், மரங்கள் என பல்வேறு உயரங்களில், பல வகையான தாவரங்கள் இருக்கின்றன. நாட்டுக்குள் பூச்சிகளால் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணம்... வயல்களில் முழுக்க ஒரே வகையான தாவரங்கள் இருப்பதுதான். பலவித தாவரங்களின் இலைகளை ருசித்துக் கொண்டிருந்த பூச்சிகளை ஒரே வகையான தாவரங்களை உண்ணப் பழக்கிவிட்டோம். காடுகளில் பலவித உணவுகளைத் தேடித்தேடி உண்டு வந்த பூச்சிகளின் பெருக்கம் இயல்பான அளவிலிருந்தது. வயல்களில் ஒரே விதமான உயர் விளைச்சல் கொடுக்கும் வீரிய ரகங்களை உண்டு வாழப் பழகிய பூச்சிகளுக்கு உணவு கிடைப்பது எளிதாக இருப்பதால், அவற்றின் பெருக்கமும் அதிகமாக இருக்கிறது.

ஒரு பகுதியில் குறிப்பிட்ட ஒரே பயிரே பரவலாக விளையும்பட்சத்தில் அப்பயிரை மட்டுமே உண்ணக்கூடிய பூச்சிகள் அப்பகுதியிலேயே உயிர்வாழப் பழகி, எண்ணிக்கையில் பெருகி விடுகின்றன. இதுதான் ஒரே வகையான பூச்சிகளின் பெருக்கத்துக்கு முக்கியகாரணம். பலவகையான பூச்சிகள் இருக்கும்போது பூச்சித் தொந்தரவு இருப்பதில்லை. ஆனால், சிலவகைப் பூச்சிகள் மட்டும் அதிகமாகும்போது பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இப்படித் தொந்தரவு ஏற்படுத்தும் பூச்சிகளை அழிப்பதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டதுதான், பூச்சிகொல்லி என்ற உயிர்க்கொல்லி.

பூச்சிகொல்லிகளால் பூச்சிகள் மட்டும் அழிவதில்லை. மண், நீர், காற்று எல்லாம் விஷமாகி பூச்சிக்கொல்லி தெளிக்கும் வயலில் விளைபொருள்களும் விஷமாகின்றன. அதைச்சாப்பிடும் நமக்குள்ளும் விஷம் பரவுகிறது. விளைபொருள், தண்ணீர், காற்று என அனைத்தும் விஷ மாவதால்... நுண்ணுயிரிகளிலிருந்து கால்நடைகள்வரை அனைத்து உயிரினங்களுக்கும் பிரச்னை

ஒரு காலகட்டத்தில் இந்தப் பூச்சிகளை ஆபிரிக்காவிலிருந்து அவுஸ்ரேலியாவுக்குக் கொண்டு போனார்கள். ஏனென்றால், அவுஸ்ரேலியாவில் கால்நடைக் கழிவுகள் மட்கக்கூடிய சூழ்நிலை இல்லை. எனவே மட்க வைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகப் பெரிய பெரிய சாண உருண்டைகளைச் சிறியதாக மாற்றக்கூடிய இந்தப் பூச்சிகளை அவுஸ்ரேலியாவில் இறக்குமதி செய்தார்கள்.



ஏற்படுகிறது. இதனால், மொத்தச் சூழ்நிலையும் மாறிப் போகிறது. அதனால்தான் பூச்சிகொல்லிகளைத் தவிர்க்கச் சொல்கிறோம். பயிர்ச்சூழ்நிலையை முறையாகப் பராமரித்தாலே... எளிதாகப் பூச்சிகளைக் கட்டுப்படுத்திவிடலாம்.

பயிர்ச்சூழ்நிலையைத் தீர்மானிப்பதில் உயிர் காரணிகள், உயிரில்லாத காரணிகள் என இரண்டு வகைகள் உண்டு. காற்று, மண், நீர் போன்றவை உயிர் இல்லாத காரணிகள். பல்வேறு விலங்குகள், மனிதர்கள், கால்நடைகள் போன்றவை உயிர் காரணிகள். இவற்றில் உருவத்தில் பெரியதாக உள்ள உயிர் காரணிகள், அவை செய்யும் செயலைப் பொறுத்துத்தான் சூழலை மாற்ற முடியும். ஆனால், உருவத்தில் சிறிதான பூச்சிகள் செய்யும் வேலை படுபயங்கரமானது. இந்தச் சிறிய பூச்சிகளை அழிப்பதற்காகத்தான் இத்தனை ஆண்டுகளாக விஷம் தெளித்துத் தெளித்துச் சூழ்நிலையை மாசுபடுத்தி வருகிறோம்.

பயிர் சூழலைப் பராமரிப்பது, பூச்சிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது, உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவது போன்றவற்றில்தான் மனிதர்களின் எதிர்கால வாழ்க்கை அடங்கியிருக்கிறது. இது எதிர்கால உணவுப் பாதுகாப்புக்காக மட்டுமில்லை... உலகையே பாதுகாக்க வேண்டிய நிலை. உலகின் உணவு மண்டலங்கள் அனைத்தும் தற்போது வெறுமையாக இருக்கின்றன.

தற்போதுள்ள புவி வெப்பமாதல் மற்றும் வறண்ட சூழ்நிலை ஆகியவற்றைப் பூச்சிகள் எப்படி எதிர்கொள்ளப் போகின்றன என்பதைக் கேட்டால் இன்னும் ஆச்சரியப்படுவீர்கள். இந்தச் சூழ்நிலைகளை எதிர்கொள்வதில் தாவரங்களைவிட அதிக பலம் வாய்ந்தவையாகப் பூச்சிகள் இருக்கின்றன. இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாப்பது, பல்லுயிர்ச்சூழல் நிலவும் ஒருங்கிணைந்த பண்ணையம் என நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அது மட்டும் பாதுகாப்பதில்லை.

உதாரணமாக, பண்ணையத்தில் மாடு வளர்க்கிறோம். மாடு போடும் சாணத்தை யார் மட்க வைப்பது? நுண்ணுயிரிகள் மற்றும் 'சாணம் உருட்டிகள்' என அழைக்கப்படும் பூச்சிகள்தான், அந்த வேலையை அதிகம் பார்க்கின்றன.

ஒரு காலகட்டத்தில் இந்தப் பூச்சிகளை ஆபிரிக்காவிலிருந்து அவுஸ்ரேலியாவுக்குக் கொண்டு போனார்கள். ஏனென்றால், அவுஸ்ரேலியாவில் கால்நடைக் கழிவுகள் மட்கக்கூடிய சூழ்நிலை இல்லை. எனவே மட்க வைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகப் பெரிய பெரிய சாண உருண்டைகளைச் சிறியதாக மாற்றக்கூடிய இந்தப் பூச்சிகளை அவுஸ்ரேலியாவில் இறக்குமதி செய்தார்கள். மனிதர்களின் எதிர்கால வாழ்க்கைக்குப் பூச்சிகளின் உதவியும் அவசியம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

-ஏ.ஜே.ஞானேந்திரன்-


ஹிட்லரின் வதை முகாமில் வதைபடும் யூதர்கள்...

# அதிர்வு, சோகம், ஆச்சரியம் தந்த யூத படுகொலை ஆவணவகம்

உரோம் நகர முற்றுகையின்போது கிட்ரோன் பள்ளத்தாக்கில், நகரின் சுவருக்கு வெளியேயுள்ள கிகோன் ஊற்றிலிருந்து நீரை நகருக்குள் தருவித்தது ஒரு சாதாரண பொறிமுறை அல்ல! சராசரி 60 சென்ரிமீற்றர் 2 மீற்றர் உயரமும் கொண்ட இந்த நிலத்துக்கடியிலான குகைப் பாதை ஓரங்களில் உளியாலும், கோடரியாலும் கற்பாறை செதுக்கப்பட்டிருக்கும் அடையாளங்களை எம்மால் காணமுடிந்தது.

1980 இல் பழைய ஜெருசலேம் நகர் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியக் களத்தின் பட்டியலில் குறிக்கப்பட வேண்டுமென யோர்தானால் முன்மொழியப்பட்டது. 1981 இல் இந்தக் கோரிக்கையின் பிரகாரம் பழைய ஜெருசலேம் யுனெஸ்கோ பட்டியலில் சேர்க்கப்பட்டது. அடாத்தாக காணி பிடிப்பது இலங்கையிலாகட்டும் இஸ்ரேலில் ஆகட்டும் நிலத்திற்காக அடிபடுவது எந்த நாட்டையும் விட்டு வைப்பதாகத் தெரியவில்லை என்ற நினைப்பே மனதுள் மேலிட்டது.

**அக்கிரமங்களின் காட்சிக்கூடம்**

அருங்காட்சியகங்களுக்கு செல்வதில், நான் பெரு விருப்புடையவன். அற்புதமான இந்த சேகரிப்புகள், நம்மை

## ஜெருசலேம் யாத்திரை...!

இன்னொரு உலகத்திற்குக் கொண்டு செல்லத் தவறுவதில்லை. லண்டனில் அருங்காட்சியங்களில் நுழைவுக் கட்டணம் அறவிடப்படுவதில்லை. அங்கு நிற்கும்போதெல்லாம், அதிகமான எனது பொழுதுகள் இங்கேதான் கழிவதுண்டு. இஸ்ரேலில் அப்படியொரு வாய்ப்புக் கிடைக்காதா? என்று ஏங்கிய என்னை, பயண ஏற்பாட்டுக் குழுவினர் ஏமாற்றி விடவில்லை.

யாத் வாஷம் (Yad Vashem) என்று அழைக்கப்படும் போர்க் கால நினைவுகளைத் தாங்கிய அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் சென்றனர். யாத் வாஷம் (Yad Vashem) என்பது பெரும் இன அழிப்புக்கு ஆளாகிப் பலியான யூதர்களுக்காக இஸ்ரேல் அரசால் உருவாக்கப்பட்ட உத்தியோகபூர்வ நினைவிடம். இது இஸ்ரேலிய சட்ட மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட “ யாத் வாஷம் சட்டம்” மூலம் 1953 இல் நிர்மாணிக்கப்பட்டது. யாத் வாஷம் ஒரு குன்றின் மேல் அமைக் கப்பட்டுள்ளது. இது உலகத் தரம் வாய்ந்த காட்சிக்கூடமாகக் கருதப்படுகிறது.

## பயண அனுபவம் -7

இங்கு, காலத்திற்குக் காலம் புது விடயங்களை சேர்க்கிறார்கள். புகைப்படங்கள், திரைப்படங்கள், ஆவணங்கள், கடிதங்கள், கலை வேலைப்பாடுகள், தனிப்பட்ட முறையில் உபயோகித்த பொருட்களைக் கொண்டு புதிதாக நவீனப்படுத்தித் திறக்கப்பட்ட இந்த நினைவிடத்தில் மனதை உருக்கும் தகவல்கள் பலவற்றை வெளியாருக்கு சொல்ல முனைந்துள்ளார்கள். ஜேர்மனியில், யூதர்கள் ஒரு


கொல்லப்பட்ட, துன்பங்களை அனுபவிக்கும் யூதர்களின் புகைப்பட ஆவணவகம்

காலத்தில் அடைத்து வைக்கப்பட்ட முகாம்களில் கண்டெடுக்கப்பட்ட பல பொருட்களும் இதில் அடங்கும்.

நிஜத்தில் யாத் வாஷம் என்பது யூதர்கள் பட்ட அவலங்களை ஓர் ஆவணமாகத் தொகுக்க வேண்டும், அதை எதிர்காலச் சந்ததியினர் பார்க்க வேண்டும் என்று 1953 இல் ஆரம்பித்த ஓர் அமைப்பாகும். மலையை ஊடறுத்து ஒரு சிறை போல வடிவமைத்து, 9 கலரிகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டதே இந்த நினைவகம். இஸ்ரேலுக்குப் பயணிக்கும் ஒவ்வொருவரும் அவசியம் பார்க்க வேண்டியது.

யாத் வாஷத்திற்கு அனுமதி இலவசம். ஆனால் இங்கு வருபவர்கள் உரிய முறையில் உடை அணிந்திருக்க வேண்டும். அரை காற்சட்டைகள் , குட்டைப் பாவாடைகள் அணிந்துகொண்டு உள் நுழைய முடியாது. இது மரணங்கள் சம்பந்தப்பட்டது அதிலும் இவர்களின் மூதாதையர் சம்பந்தப்பட்டது. எனவே இந்த வரலாற்று நிகழ்வுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற கார ணத்தோடு இந்த நிபந்தனை இருப் பது நியாயமானதே. இங்கு 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கும் அனுமதியில்லை. ‘யூதப் படுகொலை’ சம்பந்தப்பட்ட சில காட்சிப் பொருள் கள் அவர்களின் மனதைப் பாதிக்க லாம் என்பதற்காக இந்த ஏற்பாடு.

எல்லாப் பகுதிகளையும் வெள்ளிக்கிழமை இரண்டு மணிக்கே மூடிவிடுகிறார்கள். சனிக்கிழமை முழுவதும் விடுமுறை. ஜேர்மனி படுகொலை பற்றிய எல்லா விபரங்களையும் பார்ப்பவர்களின் மனதில் இருத்த வேண்டும் என்பதே இந்த அருங்காட்சியகத்தின் முக்கிய நோக்கமாகத் தெரிகிறது. உயரமான இடத்தில் இது கட்டப்பட்டு இருப்பதால், இதற்கு வெளியே வந்து பார்த்தால் இஸ்ரேல் ஊர் முழுவதும் மிக அழகிய முறையில் தோற்றமளிப்பதைக் காணமுடியும்.

**சகோதரர்களை நினைவுகூரல்**

இந்த நாட்டின் அதி முக்கிய அருங்காட்சியகத்திற்குள் நுழையும் முன்னர், நாஸிகளின் வதையால் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் அழிக்கப்பட்ட 6 மில்லியன் சகோதரர்களை நினைவுகூருவது பற்றி இங்கே சொல்லியாக வேண்டும். கடந்த வருடம் ஏப்ரல் 12 இல் இந்த நாளை நினைவுகூர்ந்தார்கள். காலை 10 மணியளவில் நாடெங்கும் சைரன் இந்த நேரத்தில் 2 நிமிட நேரம் ஒலிக்க விடப்படும். தெருவில் நின்ற இடத்தில் அசையாது நின்று கொண்டு பொது மக்கள் அஞ்சலி செலுத்துவதுண்டு.

இது ஆண்டுதோறும் இதே திகதியில் நடக்கின்றது. இந்த அருங்காட்சியகத்திலும் மலர் வளையங்கள் சாற்றும் பாரம்பரிய வைபவங்கள் அடங்கலாக, வேறு நிகழ்வுகளும் இடம் பெறுவதுண்டு. இந்த நாளில் இரவு 7.30வரை நாடெங்கிலும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படும். பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு, மோசமான இந்த நிகழ்வுகள் கதை கதையாக பாதிக்கப்பட்டவர்களால் இந்த நாளில் புகைப்படங்கள், திரைப்படங்கள் உதவியுடன் சொல்லப்படுகின்றன.

**பெயர்களின் கூடம்**
(Hall of Names)

1941 இலிருந்து 1945 வரை, யூதர்கள் இனப்படுகொலை மூலம் திட்டமிட்டு கொல்லப்பட்டனர். மிகப்


இறந்த, காணாமல் ஆக்கப்பட்ட யூதர்களின் பெயர்கள் பதிக்கப்பட்ட இடம்

பெரிய இனவழிப்பு, இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், 60 இலட்சம் ஐரோப்பிய யூதர்கள் ஜேர்மனியில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். நிகழ்வைக் குறிக்கப் பயன்படும் ஆங்கிலச் சொல்லான ஹாலோகோஸ்ட் (Holocaust) என்பதற்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

யூதர்கள் தவிர வேறும் பிற இனத்தவர்களும், பிரிவினரும் கூட்டப் படுகொலை செய்யப்பட்டனர். யூதர்களைக் குடிமக்கள் சமூகத்திலிருந்து விலக்கும் சட்டம் இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே இயற்றப்பட்டது. வதை முகாம்கள் அமைக்கப்பட்டு, அங்கே கொண்டு வரப்படுபவர்கள் களைப்பாலும், நோயாலும் இறக்கும் வரை அடிமைகளாக வேலை வாங்கப்பட்டனர். கிழக்கு ஐரோப்பாவில் புதிய பகுதிகளைக் கைப்பற்றிய ஜேர்மனி, சிறப்புப் படையணிகள் மூலம், யூதர்களையும், அரசியல் எதிரிகளையும் கொன்று குவித்தது. **(பயணிப்போம்)**

# இந்த வார இராசி பலன்

## மார்ச் 17 முதல் மார்ச் 23 வரை



**மேஷம்:**
திட, தைரிய, வீரி யஸ்தானத்தில் ராகு இருப்பதால் தைரியமாக சில முடிவுகளை எடுப்பீர்கள். அரசியலில் இருப்பவர்களுக்கு திடீர் யோகம் அடிக்கும். இழந்த பதவி மீண்டும் கிடைக்கும். சகோதர உறவுகளிடையே இருந்த மனக்கசப்புகள் நீங்கும். சூரியனின் பார்வையால் சுபவிசேஷத் திற்கான ஏற்பாடுகளைச் செய்வீர்கள். கைமாற்றாகக் கொடுத்த பணம் கிடைக்கும். கண் சம்பந்தமான சிறிய உபாதைகள் வந்து நீங்கும். உறவினர்களுடன் சேர்ந்து கூட்டுத்தொழில் தொடங்கும் யோகம் உள்ளது.



**ரிஷபம்:**
சுக்கிரன் உங்களுக்கு சுபயோகத்தைத் தருவார். பிள்ளைகள் திருமண விஷ யமாக பேச்சுகள் நடக்கும். நான்கு சக்கர வண்டி வாங்கும் யோகம் உள்ளது. செவ்வாய் வலுவாக இருப்பதால் சொத்து பிரச்சினைகள் சாதகமாக முடியும். சொந்த ஊரில் சொத்து வாங்கும் யோகம் உள்ளது. சனி, கேது இருவரும் எட்டில் இருப்பதால் அடிக்கடி மறதி, பதற்றம் வந்து போகும். பயணத்தின்போது கவனம் தேவை. அலுவலக விடயங்களில் திருப்தியற்ற மனநிலை இருக்கும். பணப்பொறுப்புக்களை கையாள்பவர்கள் கவனமுடன் இருப்பது அவசியம்.



**மிதுனம்:**
ஏழில் சனி, கேது இருவரும் இருப்பதால் எதிலும், நிதானம் கவனம் தேவை. குடும்பத்தில் பழைய விஷயங்களை பேசிக்கொள்ளாமல் இருப்பது நல்லது. நண்பர்களால் சில சங்கடங்கள் வரவாய்ப்புள்ளது. கணவரின் உடல் நலம் காரணமாக அலைச்சல், மருத்துவச் செலவுகள் வந்து நீங்கும். சுக்கிரன் மனமகிழ்ச்சியைத் தருவார். தள்ளிப் போய்க் கொண்டிருக்கும் சுப காரியங்கள் நல்ல விதத்தில் கூடிவரும். அலுவலகத்தில் வேலைச்சுமை இருந்தாலும் ஆதாயம் கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பங்குச் சந்தையில் திடீர் லாபம் கிடைக்கும்.



**கடகம்**
சுக்கிரன், செவ்வாய் இருவரும் உங்கள் எண்ணங்கள், குறிக்கோள்கள் நிறைவேற சுபபலத்தைத் தருவார்கள். சொத்து வாங்குவதற்கு முன்பணம் கொடுத்து ஒப்பந்தம் செய்வீர்கள். பிள்ளைகள் உங்களைப் புரிந்துகொண்டு ஒத்துழைப்பார்கள். கோயில் திருப்பணி, திருவிழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். சனி, கேது இருவரும் 6ல் இருப்பதால் எதிர்பாராத திடீர் அதிர்ஷ்டத்திற்கு இடமுண்டு.

சுயதொழில் செய்பவர்கள் தொழிலை விரிவுபடுத்தும் யோகம் உண்டு.



**சிம்மம்**
சூரியன் ராசியைப் பார்ப்பதால் தொட்டது துலங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். பூர்வீகச் சொத்து சம்பந்தமாக பங்குதாரர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படும். புதன் வக்கிரமாக இருப்பதால் வாக்குவாதம், ஜாமீன் போன்றவற்றை தவிர்க்கவும். குருவின் அமைப்பு காரணமாக திடீர் வெளிநாட்டுப் பயணத்திற்கு இடமுண்டு. வீடு கட்ட எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். ராகு லாபஸ்தானத்தில் இருப்பதால் திடீர் அதிர்ஷ்டம் வரும்.



**கன்னி**
சுக்கிரன் 5ல் இருப்பதால் மனமகிழ்ச்சி, பணவரவு உண்டு. மகள் திருமண விஷயமாக நல்ல இடத்து சம்பந்தம் தேடி வரும். பெண்களின் சேமிப்பு பணம், தங்க நகைகளாக மாறும். குருவின் பார்வையால் பெண்களுக்கு தாய் வீட்டில் இருந்து சொத்து சம்பந்தமாக இனிக்கும் செய்தி வரும். சனி, கேது இருவரும் 4ல் இருப்பதால் அலைச்சல், பயணங்கள் அதிகரிக்கும். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. அலுவ லகத்தில் ஊர் விட்டு ஊர் சென்று பணிபுரிய வேண்டிய கட்டாயம் ஏற்படும். எதிர்பார்த்த விசா திங்கட்கிழமை கைக்கு வரும்.



**துலாம்**
சுக்கிரன் சுகஸ்தானத்தில் இருப்பதால் மனநலம், உடல்நலம் சீராக இருக்கும். இல்லறம் இனிக்கும். மனைவிக்கு தங்க நகைகள் வாங்கி பரிசளிப்பீர்கள். சனி, கேது இருவரின் சம்பந்தம் காரணமாக ஆன்மிகத்தில் மனம் லயிக்கும். பிரசித்தி பெற்ற பரிகார தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பூர்வீகச் சொத்தில் இருந்து உங்களுக்கு சேர வேண்டிய பங்குத்தொகை கைக்கு வந்து சேரும். உங்களைச்சுற்றி இருப்பவர்களின் உண்மையான குணத்தைக் கண்டு கொள்வீர்கள்.



**விருச்சிகம்**
தன, குடும்ப, வாக் குஸ்தானத்தில் சனி பகவானுடன், கேது சேர்ந்திருப்பதால் சிந்தனைகள் அதிகரிக்கும். குறிப்பாக பெண்கள் பல விஷயங்களை நினைத்து மனதைக் குழப்பிக் கொள்வார் கள். வெளி நாட்டு வேலையை எதிர்பார்த் தவர்களுக்கு சாதகமான செய்தி வரும். செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் உத்தியோகத்தில் இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உங்கள் கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளும். வியாபார பயணங்கள் லாபகரமாக, வெற்றிகரமாகவும் அமையும்.



**தனுசு**
சனி, கேது இரு வரும் ராசியில் இருப்பதால் விரக்தி, சோர்வு, படபடப்பு, கோபதாபங்கள் இருக்கும். எதிலும் நிதானத்தைக் கடைபிடிக்கவும். நண்பர்களால் சில சங்கடங்கள் வந்து நீங்கும். சுக்கிரன் 2ல் இருப்பதால் பண வரவு இருக்கும். அதே நேரத்தில் வீண் செலவுகள், மருத்துவச் செலவுகள் வந்து நீங்கும். நின்று போன கட்டிட வேலைகளை மீண்டும் தொடங்குவீர்கள். சூரியனின் பார்வை காரணமாக அரசாங்க விஷ யங்கள் அனுகூலமாக முடியும். பொறுப்பு கிடைக்கும்.



**மகரம்**
நிறை, குறைகள் உள்ள நேரம். ராசிநாதன் சனி பகவானுடன் கேது சேர்க்கை பெற்றுள் ளதால் முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றங்கள் இருக்கும். யாருக்கும் அறிவுரை, ஆலோசனை கூறுவதை தவிர்ப்பது நல்லது. சுக்கிரன் ராசியில் இருப்பதால் பெண்கள் விரும்பிய தங்க, நவரத்தின நகைகள் வாங்கி மகிழ்வார்கள். பிள்ளைகள் உங்களைப் புரிந்துகொண்டு பாசம் காட்டுவார்கள். செவ்வாய் உங்களுக்கு சொத்து யோகத்தைத் தருவார். வீடு, நிலம் வாங்க ஒப்பந்தம் செய்வீர்கள். தந்தையாரின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.



**கும்பம்**
தன குடும்ப ஸ்தா னத்தை குரு பார்ப்ப தால் செல்வாக்கு உயரும். உங்களை உதாசீனப்படுத்தியவர்கள் உங்கள் உதவி நாடி வருவார்கள். ஆடல், பாடல் கலைத்துறையினருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். சனி, கேது இருவரும் லாபஸ்தானத்தில் இருப்பதால், கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். வெளிமாநிலத்தில் உள்ள தலங்களுக்குச் சென்று வழிபடுவீர்கள். அலுவலகத்தில் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். ஏ.சி, லேப்டாப் போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள். அவசரத் தேவைக்காக வாங்கிய கடனை அடைப்பீர்கள்.



**மீனம்**
4ல் ராகு, 12ல் புதன் என கிரக அமைப்பு இருப்பதால் அலைச்சல், பயணங்கள் இருக்கும். அடிக்கடி செலவு வைத்துக்கொண்டிருக்கும் வண்டியை மாற்றி புது வண்டி வாங்குவீர்கள். கல்வி வகையில் செலவுகள் ஏற்படும். தாய் வழி உறவுகளிடையே சில மனவருத்தங்கள் வரலாம். செவ்வாய் 2ல் யோகத்துடன் இருப்பதால் பணப்புழக்கம் இருக்கும். அதிக வட்டிக்கு வாங்கிய கடனை அடைப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் லாபகரமாக நடக்கும். வங்கியில் இருந்து கடனுதவி கிடைக்கும். எதிர்பார்த்த அரசாங்க காண்ட்ராக்ட் கைக்கு வரும்.



முள்ளிவாய்க்கால் சிறி
(ஊடகக் கற்கைகள் யாழ். பல்கலைக்கழகம்)

# புகைபிடித்தல்!

## இதுவும் ஒரு தற்கொலைதான்?

சிகரெட்டின் எரி முனையில் வெப்பநிலை என்னவாக இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? 900 டிகிரி செல்சியஸ் என்றால் நம்புவீர்களா? இது நீரின் கொதி நிலையை விட ஒன்பது மடங்கு அதிகமானதாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. புகை பிடிக்கும்போது, இந்த வெப்பத்தால் சில மாற்றங்கள் ஏற்பட்டு மிகவும் விஷமுள்ள பொருட்கள் வெளிவிடப்படுகின்றன. இதனால் இயற்கை மாசுபடுவதுடன் உங்கள் அருகில் உள்ள அப்பாவிகளும் படிப்படியாகப் பாதிப்பிற்குள்ளாகின்றனர். அதாவது சுருங்கச் சொன்னால் புகைபிடிப்பதால் நீங்கள் தற்கொலை செய்வதோடு, பிறரையும் சிறுகச் சிறுகக் கொலை செய்கிறீர்கள்.

மன மகிழ் போதைப் பொருளாகவே இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று அது ஒரு நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும் பங்கினை வகிக்கிறது. உலகம் முழுவதும் ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் இன்று புகைத்தலுக்கு அடிமையாகி இருக்கின்றனர்.

புகைத்தலின் வரலாறை கி.மு. 5000 ஆம் ஆண்டிற்கும் முன்னதெனக் கணக்கிடலாம். ஆனால் உலகம் முழுதும் பல் வேறுபட்ட பண்பாட்டு வடிவங்களில் புகைத்தல் பதிவு செய்யப்பட்டுள்ளது. முற்காலத்தைய புகைபிடித்தல் மத ரீதியிலான சடங்குகளில் தொடர்புடைய வகையில் உருவாகியது. கடவுளர்களுக்குப் படையலாகவும், தூய்மைப்படுத்தும் சடங்குகளில் அல்லது ஆனியக்காரர்கள் மற்றும் பூசாரிகள் தங்களது புத்தியை தெய்வீகமாக்க அல்லது ஆன்ம விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்திற்கு அனுமதிப்பதாகப் புகைத்தல் அமைந்திருந்தது. ஐரோப்பிய ஆய்வுப் பயணம் மற்றும் அமெரிக்க கண்டங்களின் கைப்பற்றலுக் குப் பிறகு, மீதமுள்ள உலகம் முழுவதும் புகைபிடிக்கும் பழக்கம் விரைவாகப் பரவியது.

ஐரோப்பாவில், புகைத்தல் ஒரு புது மாதிரியான சமூக நடவடிக்கையை அறிமுகப்படுத்தியது. புகைத்தல் சூழ்நிலைக்கேற்றவாறு காலந்தோறும் மாறிக் கொண்டது. ஓரிடத்தில் புனிதம் எனக் கருதப் பட்டும் அதே சமயம் இன்னொரு இடத்தில் பாவம் எனக் கருதப்பட்டது. நவீனம், ஆபாசம், ஒரு துன்ப நீக்கி, இறப்பிற்கு வழிவிடுவது, உடல் நலத்துக்குக் கேடானது என்று புகைபிடித்தல் பல மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறது.

இன்றைய மருத்துவ ஆய்வுகள் புகைபிடித்தல் நுரையீரல் புற்று நோய், மாரடைப்பு, ஆண்குறி விறைப்பின்மை மற்றும் பிறப்புக் கோளாறுகளுக்கு வழிவிடுவது போன்றவற்றை ஏற்படுத்தும் என்கிறது. புகைபிடித்தலிலுள்ள உள்ளார்ந்த உடல் நலக் கோளாறுகளே பல நாடுகளை புகையிலை பொருட்களின் மீதான உயர் வரிகளை விதிக்கக் காரணமாக்கியது.

ஒரு சிகரெட்டில் சுமார் நாலாயிரம் வகையான கொடிய வேதிப் பொருட்கள் உள்ளன என்பது பெரும்பாலானாருக்குத் தெரியாத விடயம். அவற்றில் காணப்படும் வேதிப்பொருட்களில் அரெட்டோன் எனக் கூறப்படும் ஒன்று நாம் நகப்பூச்சை கழுவி அகற்றப் பயன்படுத்தும் வேதிப்பொருள்களை ஒத்த கொடூரத் தன்மை கொண்டது. சயனைட் எனப்படும் விஷம், பூடேன் எனப்படும் எரிபொருள், ரொக்கேட்டுக்களை வானத்திற்கு உந்தித்தள்ள வெடிபொருளாகப் பயன்படுத்தப்படும். மொதனோல் ஆகியவற்றுடன் நேஃப்தனால் ரேடோன் எனப்படும் கதிர் இயக்க வாயுக்களுக்கு சிகரெட் புகையிலையில் உண்டு.

வீட்டில் தரையையும், கழிவறைகளையும் சுத்தமாக்கப் பயன்படுத்தப்படும் வேதியல் பொருளான அமோனியா பயிர்களில் உட்காரும் பூச்சிகளையும், எறும்புகளையும் கொல்லப் பயன்படுத்தப்படும் டி.டி.ரி (D.D.T) எனும் வேதிப் பொருட்கள், போலோனியம் 210, சல்பூரிக்கமிலம், ஆர்ச்சனிக் எனும் விஷம் கார் பற்றரியில் உள்ள கேட்டியம் எனும் அமிலம் நிகோடீன் எனும் போதைப்பொருள் ஆகியனவும் சிகரெட்டில் உண்டு.

புகைபிடிக்கும் போது புகை நிலையில் உள்ள நிகோடின் எனும் பொருள் நம்மை புகைபிடிக்கும் நாட்டமுடையவர்களாகச் செய்கின்றது. கோப்பி அருந்துபவர்கள் புகைபிடித்தால் தினமும் கோப்பி அருந்தும் போது புகையிலையையும் மனம் நாடும். இது தான் நிகோடின் செய்யும் அழுத்தம் அதனால் தான் பலர் புகைப்பிடித்தால் தான் காலைக் கடமையைச் சுமுகமாகச் செய்ய முடிகின்றது என்று சொல்கின்றார்கள்.

மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையத் தின் புள்ளி விபரங்களின் படி வருடத்திற்கு 40000 பேர் சிகரெட் மற்றும் மதுவுடன் தொடர்புடைய நோய் களால் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். இலங்கை யில் இதற்கான காரணம் நாட்டில் இன்றைய காலகட்டத்தில் 15 வயத்திற்கு மேற்பட்ட 33 வீதப் பேர் புகைப்பிடிப்பவர்கள். 15 வயத்திற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்ட 26.6 சதவீத பேரும் 25 முதல் 39 வயதிற்கும் இடைப்பட்ட 36.9 சதவீத பேரும் புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளானவர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

புற்று நோய் ஆஸ்பத்திரியை நிரப்புபவர்களில் புகை பிடிப்பவர்களும் அதிகளவில் இடம்பெறுகின்ற னர். புகை பிடிப்பது தன் நலத்துக்க மட்டுமல்ல அவர் சார்ந்த சூழலிலே வாழ நேரிடுகின்ற எல்லோருக்கும் சுகாதாரக் கேட்டை விளைவிக்கக் கூடியதொன்று. புகை பிடித்தலைப் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியிலே ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் சுகாதாரப் பிரிவு பல கோடிகளை வருடாவருடம் செலவிட்டுக் கொண்டு வந்தாலும், அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர எந்த அரசும் பூரண ஆதரவை வழங்குவதாக இல்லை. பல நாடுகளில் புகையிலைத் தொழிற்சாலைகள் செலுத்தும் வரிகளின் தொகையே அந்தந்த நாட்டு அரசுகளின் பெரிய வருமானமாகப் பார்க்கப்படுகிறது. அண்மைக் காலத்தில் 40 வயதுக்குட்பட்ட இளை ஞர்களுக்கு இருதய நோய் உருவாக சிகரெட் புகைக்கும் பழக்கமே காரணமாகும். இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுள் நான்கு பேரில் ஒருவர் புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவராக இருக்கின்றார். ஒரு நபருக்கு இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல் எனப் படும் கொழுப்புச்சத்து நீரிழிவுநோய் ஆகியவை ஏற்கனவே இருந்தால் புகை பிடிக்கும் பழக்கம் அவருக்கு இருதய நோய் வருதை தடுக்கவே முடியாத நிலைக்கு கொண்டு சென்றுவிடுகின்றது. இது போன்ற நோய்களை மருத்துவ சோதனைகள் செய்து கண்டுபிடிக்கும் பழக்கம் பலருக்கு கிடையாது என்பதால் நிறைய பேர் இதுபோன்ற நோய்கள் தங்களுக்கு இருப்பது தெரியாமலே புகைத்தலை நாடுகின்ற நிலை ஏற்படுகின்றது. சிகரெட் புகைப்பதால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் பற்றி யாழ். பல்கலைக்கழக வைத்திய அதிகாரி திருமதி. ஸ்ரீஸ்கந்தராஜா அண்மைக் காலத்தில் எடுத்த குறிப்பின்படி, குறிப்பாக பதின்ம வயது பாடசாலை மாணவர்களிடத்தே புகைத்தல் அதிகரித்தே காணப்படுகின்றது.

நண்பர்களுடன் மகிழ்ந்திருக்கும் தருணங்களில் மற்றும் மனக் குழப்பங்கள் அல்லது மன அழுத்தம் ஏற்படுகின்ற போதும் நண்பர்களினால் புகைத் தலுக்கு திணிக்கப்படுகின்றன. அதனால் சற்றும் சிந்திக்காமல் புகைத்தலை நாடுகின்றனர். புகைத் தல் காரண மாக உடலில் எல்லா பகுதிகளும் பாதிப்படைகின்றன. குறிப்பான இரத்தக் குழாய் தாக்கப்படுவதனால் எல்லா உடல் உறுப்புக்களும் பாதிக்கப்படுகின்றது. அத்துடன் சுவாசப் பையினுள் புகை செல்வதன் காரணமாக சுவாசப் பிரச்சினை ஏற்படுகின்றது. இரத்தக் குழாயில் ஏற்படும் மாற்றத்தால் மாரடைப்புக் கூட ஏற்படும் எனக் கூறுவது கவனிக்கத்தக்கது.

புகைத்தல் மற்றும் மதுபாவனையால் கண் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளும் ஏற்படுகின் றன. பார்வை பிரச்சினை என்பது இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பார்வைப் புலனில் ஏற்படும் கோளாறுகள் எனலாம். புகைத்தலால் மூளை மற்றும் கண் தொடர்பான நரம்புகளும் பாதிக்கப்படுகின்றன. இதனால் கண் பார்வையில் குளறுபடி ஏற்பட்டு பார்வை மங்குதல், கண்நோய் கள், ஏற்பட வாய்ப்புண்டு. அதிகளவு இரசாயனம் கலந்த புகைத்தல் மற்றும் மதுசாரத்தை உள்ளெடுக் கும் போது பார்வைக் குறைபாடு ஏற்படுகின்றது. இதனால் தெளிவான பார்வையை பெற்றுக் கொள்வதில் சிரமப்படலாம்!

புகைத்தலை பல்வேறு வழிமுறைகளில் தடுக்க முடியும். குடும்ப மட்டங்களிலே அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் புகைத்தலை உளவியல் ரீதியான நடத்தைசார் அணுகுமுறை மூலமும் பெருமளவில் குறைத்துக் கொள்ள முடியும் என்று உளவியல் துறை விரிவுரையாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

**சண்டே ஒவ்சேவரின் More Bombs Drop in the 'Mig Deal' கட்டுரையின் தமிழாக்கம்**

தொடர் 4

# இன்னும் குண்டுகள் விழும் மிக் வியாபாரம்

1991 இல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் உக்ரைன் தனிநாடாகியது. இந்நிலையில் மிக் விமானங்கள் பல வெயிலிலும் பனியிலும் மழையிலும் பயனற்றுக் காயும் நிலையேற்பட்டது. இலங்கைக்கு இந்த விமானங் களை வழங்குவதற்கு சிங்கப்பூர் நிறுவனமொன்று உட்பட பல நிறுவனங்கள் முயன்றன. இதில் பல முறைகேடுகள் உள்ளன போல தோன்றுகின்றது என இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

டிசம்பர் 2006 இல் மிக் விமானக் கொள்வனவு மோச டியை முதன்முதலில் அத்தாஸ் பகிரங்கப்படுத்தினார். இது நாடுகளுக்கு இடையிலான நடவடிக்கை என்ற போர்வையில் இடம்பெற்ற வர்த்தக செயற்பாடு என அவர் குறிப்பிட்டார். 2000 ஆம் ஆண்டு விமானப் படை கொள்வனவு செய்தவற்றில் எஞ்சியிருந்த விமானங்களே 2006 இல் அதிகூடிய விலையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

அகந்தை மனோபாவம் கொண்ட, பழிவாங்கும் நோக்கமுள்ள அதிகாரம்மிக்க நபர்கள் என் மீது பயங்கரமான நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டனர் எனவும் அவர் குறிப் பிட்டார். பாதுகாப்பு அமைச்சு தனது பகிரங்க அறிக்கைகளில் இக்பால் அத்தாஸை துரோகி என வெளிப்படையாகக் குறிப் பிட்டது. அவரது பாதுகாப்பு விலக்கப்பட்டதுடன் அவர் அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டார். எனது சங்கடமான பகிரங்கப்படுத்தல்கள் காரணமாக யாரோ எங்கோ ஆழமாக காயமடைந்துள்ளனர் என நான் உணர்ந்தேன் என இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டார்.

பெலிமிசா ஹோல்டிங் லிமிடெட் என்ற நிறுவனம் குறித்து செய்தி வெளியிட்டதன் மூலம் 2007 ஜுலை மாதத்தில் மிக் விமானக் கொள்வனவின் நியாயபூர்வ தன்மை குறித்து சண்டே லீடர் கேள்வி எழுப்பியதுடன் லசந்த விக்கிரமதுங்கவும் பல கேள்விகளை எழுப்பியிருந்தார். இந்த நிறுவனத்திற்கே விமானப் படை மிக் கொள்வனவிற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர் களை வழங்கப்பட்டது. ஆனால், இவ்வாறான ஒரு நிறுவனம் இங்கிலாந்தில் இருக்கவில்லை. விமானப் படையுடனான ஒப்பந் தங்களிற்காக பெலிமிசா போலியான முகவரியையும் பக்ஸ் இலக்கத்தையும் பயன் படுத்தியுள்ளது என்று லசந்த வெளிப்படுத்தியிருந்தார்.

2007ஆம் ஆண்டு இந்த விபரம் வெளியான பின்னரே ராஜபக்ஷ தெரண தொலைக்காட்சியின் 360 நிகழ்ச்சிக்கு சென்றார், தில்கா சமன்மலியுடனான பேட்டியில் மிக் விமான கொள்வனவில் தனக்கு நேரடி தொடர்பில்லை எனத்



தெரிவித்தார். அந்தப் பேட்டியைப் பார்த்த தந்தை இது தொடர்பில் இன்னொரு கட்டுரையை எழுதும் உற்சாகத்தில் காணப்பட்டார் என அஹிம்சா விக்கிரமதுங்க தெரிவிக்கின்றார்.

விமானக்கொள்வனவின் போது விலைகளில் காணப்படும் வித்தியாசத்தையும் ராஜபக்ஷ நியாயப்படுத்தினார். 2000ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட விமானத்தின் ஆயுள்காலம் இரண்டு வருடங்களே என அவர் தெரிவித்தார். 2006 இல் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களின் ஆயுள்காலம் எட்டு வருடங்கள் எனவும் அவர் தெரிவித்தார். இதன் காரணமாக விலை அதிகரிப்பு நியாயப்படுத்தக்கூடியது என அவர் தெரிவித்தார். எனினும், சண்டே ஒப்சர்வர் இந்த ஆவணங்களை ஆராய்ந்தவேளை புள்ளி விபரங்களில் பல மர்மங்கள் இருப்பது தெரியவந்தது.

2000ஆம் ஆண்டு செலவு குறைந்த ஆறு புதிய விமானங்களைக் கொள்வனவு செய்து விமானப் படையிடம் வழங்கியிருந்தனர். இந்த விமானங்கள் ஒன்றிலிருந்து இரண்டு வருடகால ஆயுளை கொண்டிருந்தன. இவை 750 முதல் 850 மணித்தியாலங்கள் பறக்கக்கூடியன. இதன் காரணமாக அந்த விமானங்கள் 750 மணித்தியாலங்கள் பறந்த பின்னரோ அல்லது இரண்டு வருடங்களின் பின்னரோ அவற்றை பழுதுபார்க்கவேண்டும். விமானப் படையினர் ஒரு மாதத்திற்கு 100 மணித்தியாலங்கள் மாத்திரம் பயன்படுத்த எண்ணியிருந்தனர் என்பதை ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், 2006 இல் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களை ஆறு முதல் எட்டு வருடங்களிற்கு பயன்படுத்தலாம். அதன் பின்னரே பழுதுபார்க்க வேண்டும். ராஜபக்ஷவும் இதனையே தெரிவித்திருந்தார். எனினும், இந்த விமானங்களும் 2000ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்கள் போன்று 850 மணித்தியலாங்கள் பறக்ககூடியவை. ஒவ்வொரு விமானங்களும் பறந்த மணித்தி யாலங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை எட்டு வருடங்கள் பயன்படுத்தலாம்.

எட்டு வருடகாலத்திற்கு முன்னரே இந்த விமானங்களின் 850 மணித்தியால பறப்புக் காலம் முடிவிற்கு வந்துவிடும் என ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சோ விமானப்படையோ சுட்டிக்காட்டவில்லை. குறிப்பாக விடுதலைப் புலிகளுடனான யுத்தம் மீள ஆரம்பமாகயிருந்த நிலையில் இதற்கான சாத்தியக்கூறுகளை அவர்கள் சுட்டிகாட்டவில்லை. 2000 மற்றும் 2006 இல் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களின் இயந்திரங்களும் 500 முதல் 550 மணித்தியால பயன்பாட்டை மாத்திரம் கொண்டிருந்தன.

ஏழு வருடங்களின் பின்னர் இயந்திரங்களைப் பழுதுபார்க்க வேண்டியிருக்கும் என 2006 இல் தெரிவிக்கப்பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டில் இது இரண்டு வருடமாகக் காணப்பட்டது. ஏழு வருடங்கள் நீடிக்கவேண்டும் என்றால் விமானப் படை இந்த இயந்திரங்களை ஒரு மாதத்தில் ஆறு மணித்தியாலத்திற்கு மேல் பயன்படுத்தக்கூடாது. போர் இடம்பெறும் ஒரு நாட்டுக்கு எந்த வகையிலும் இது பொருந்தாது.

2000ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந் தத்திற்கும் 2006 ஒப்பந்தத்திற்கும் இடையில் இன்னொரு வித்தி யாசமும் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் ஆயுள்காலம் அல்லது பறக்கும் மணித்தியாலங்கள் தொடர்பில் எந்த குளறுபடிகளும் காணப்படவில்லை. இருந்த போதிலும் 2006 மேற்கொண்ட ஒப்பந்தத்தின் 13.4 கீழ் (இணைப்பு இல 4) 13.1 மற்றும் 13.2 பிரிவுகளில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, கேள்விப் பத்திர சபை மற்றும் அமைச்சரவை ஆகியன கருத்தில் கொள்ள தவறிய மற்றொரு விடயம் இது.

தெரண பேட்டிக்குப் பல மாதங்களின் பின்னர் 2007 செப்ரெம்பரில் விக்கிரமதுங்க மிக் விமானக் கொள்வனவில் ராஜபக்ஷவுக்கு உள்ள தொடர்புகள் குறித்த விரிவான தகவல்களை வெளியிட்டார். பாதுகாப்புச் செயலாளர் தனது உறவினரான உதயங்க வீரதுங்கவின் ஈடுபாட்டுடன் முதலில் இந்த விமானக் கொள் வனவு யோசனையைப் பெற்றார் என்றும் பல வழமையான கொள்வனவு நடைமுறைகள் புறக்கணிக்கப்பட்டன என சண்டே லீடர் தெரிவித்தது.

**இந்தக் கட்டுரை களுக்கு பதில் அளிக்கும் வகையில் கோட்டபாய ராஜபக்ஷ லசந்த விக்கிரம துங்கவிற்கும் அவரது பத்திரிகைக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்தார். மவுன்ட்லவேனியா நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு இடம்பெறவிருந்த நிலையிலேயே இக்பால் அத்தாஸ் நாட்டை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கப்பட்டார். பின்னர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக் கொல்லப்பட்டார்.**

(05 ஆம் பக்கம் பார்க்க...)



# அந்த... ஒரு நிமிடம்

எஸ்.கணபதி

அஸ்ரீகாங்கேசன்துறை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை அது. வீட்டின் ஹோலில் இருந்து பார்த்தால் புழுதி கிளப்பியபடி சாலையில் போகும் அத்தனை வாகனங்களையும் துல்லியமாகக் காணலாம். அந்த வீட்டுக்கு அத்தனை நெருக்கமாக அந்த நெடுஞ்சாலை காணப்பட்டது.

"றோட்டுக்குக் கிட்ட எண்ட படியாலை பரப்பு கிட்டத்தட்ட இருபது போகும்" என்று கோகிலா அடிக்கடி தன் காணியைப் பற்றிச் சொல்லிப் பெருமைப்படுவாள். "போகப் போக இன்னும் கூடுமே இல்லாமல் குறையாது" கோகிலா தன்னைத் தானே ஒருபடி உயர்த்திக் கொள்ளும் எண்ணங்களில் இதுவும் ஒன்று.

"ஏன் வீடைத் திருத்தேல்லையோ" அடிக்கடி அயலவர் கேட்பர். யுத்தத் திற்குப் பின்னர். அந்த வீட்டின் அண்டையில் இருக்கின்ற வீடுகள் பல திருத்தம் செய்யப்பட்டு விட்டன. கோகிலாவும் இன்னும் ஓரிருவர் மாத்திரம் வீட்டில் இன்னும் கை வைக்கவில்லை. கேட்டால் "பிள்ளை களுக்குச் சீதனம் குடுத்திட்டம். அவை வந்து இனி மிச்ச சொச்சத் தைப் பார்க்கட்டும்" என சொல்வர் களில் கோகிலாவும் ஒருவர்.

**நேரம்**
**காலை 08 மணி 40**
**நிமிடம் 53 செக்கன்கள்**

கோகிலாவின் மகளும் பிள்ளை யும் இன்று அதி காலை கொழும்பில் இருந்து வந்துவிட்டார்கள். பயணக் களைப்பால் உறங்கிக் கொண்டிருப்பவர்களை எழுப்ப வேண்டாம் என்று எண்ணி கோகிலா சமையலறைப் பாத்திரங்களையே இன்னும் மினுக்காமல் இருக்கிறாள். பாத்திரங்களின் ஓசை அவர்களின் உறக்கத்தைக் கெடுத்துவிடலாம் என்ற பயம் கோகிலாவுக்கு.

முதல் நாள் சொன்னபடி இராசம்மா இடியப்பம், சொதி, சம்பல் செய்து கொண்டு வந்து தந்துவிட்டுப் போய்விட்டாள். கோகிலாவின் மகளுக்கு இராசம்மாவின் இடியப்பம் பிடிக்கும். பள்ளிக்கூடம் போய்வருகின்ற காலத்திலும் அவள் அடிக்கடி இராசம்மாவிடம் தான் இடியப்பம் வாங்குவது வழக்கம். " என்ன சொன்னாலும் இராசம்மா அக்காவின்ரை இடியப்பம் போலை உங்களுக்கு அவிக்கத் தெரியாது" என்று கோகிலாவுடன் சண்டை இழுப்பாள். அது கூட நேற்று நடந்ததைப் போல இருக்கிறது... எவ்வளவு மாற்றங்கள்?

**நேரம்**
**காலை 08 மணி 42**
**நிமிடம் 15 செக்கன்கள்**

கோகிலாவின் மகள் படுத்திருந்த அறைக் கதவின் திரைச் சேலை திடீரென விலகியது. கண்களைக் கசக்கியபடி கோகிலாவின் மகளின் மகன் திரைச் சேலைக்கு வெளியே தலையை நீட்டி வெளியுலகைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு நீண்ட நாட்களுக்குப் பின் கோகிலாவைப் பார்க்கப் புதுமுகம் போல் இருந்திருக்க வேண்டும். திடீரென உள்ளே சென்று விட்டான்.

சிறிது நேரத்தின் பின்னர் வந்து மீண்டும் தலையை நீட்டிக் கோகிலாவைப் பார்த்தான். கோகிலா "வா" என்று கையை நீட்ட அவன் உள்ளே ஓடி விட்டான். பின்னர் அவனுக்கு அது விளையாட்டாகப் போக வருவதும் ஓடி ஒளிப்பதுமாக இருந்தான். அவனது கிளுகிளுப்புச் சத்தத்தில் கோகிலாவின் மகளும் எழுந்து வந்துவிட்டாள். அவளைக் கண்டதும் அவ்ளது ஒக்கலையில் ஏறி அமர்ந்து கொண்டான் அவன். கோகிலாவுக்குத் தனது மகளுக்குச் சொல்லவென்று ஆயிரம் இருந்தது. எதை முதல் சொல்வது? என்று தெரியாமல் தடுமாறினாள் அவள்.

**நேரம்**
**காலை 08 மணி 44**
**நிமிடம் 53 செக்கன்கள்**

"வீட்டைப் பார்க்கக் கொன்ராக்காரர் வாறன் எண்டவர். அதுக்கிடையிலை பல்லைத் தீட்டி முகம் கழுவு. சாப்பிட லாம். அவை வந்தால் நேரம் செண்டு போம்" கோகிலா மகளைத் துரிதப் படுத்தினாள். "அம்மம்மாவோடை இருங்கோடா குஞ்சு. அம்மா உடனை வந்திடுவன்" கோகிலாவின் மகள் தனது மகனைப் பார்த்துக் கெஞ்சினாள். அவன் அவளை விட்டு இறங்க மறுத்து விட்டான்.

**நேரம்**
**காலை 08 மணி 47**
**நிமிடம் 53 செக்கன்கள்**

கோகிலாவின் பேரன் அந்தச் சூழ்நிலைக்குப் பழகியவன் போல நடக்கத் தொடங்கினான். சமையலறை பாத்திரங்களை எடுத்து ஒவ்வொன்றாக அடுக்கினான். பின்னர் இடியப்பத் தட்டுகள், அகப்பைகள், பேணிகள் என எல்லாம் அவனது விளையாட்டுச் சாமான்களாக மாறின.

"எடாதையுங்கோ. அடி வாங்கப் போறீர்" என கோகிலாவின் மகள் அவனை அதட்டினாள்.

"விடு பிள்ளை. நீ என்னத்துக்கு இஞ்சை வாறியோ? அப்பிடித்தான் அவனும். அங்கை உப்பிடி அவனை விளையாட விடுவியளோ? நீங்கள் இரண்டு பேரும் அவனை அதட்டிப் பேசி ஒரு துணிவில்லாத ஆம்பிளையா ஆக்கிப் போடுவியள். பெடியள் எண்டால் அவங்கள் எல்லா வித குத்துக் கரணத்தையும் அடிக்க விட வேணும். கொண்ணை சின்ன வயதிலை என்ன ஆட்டம் ஆடினவன். இப்ப என்னெண்டால், கேட்டாலும் கதை சொல்லான். உப்பிடித்தான் எல்லாரும்" கோகிலாவுக்குத் திடீரென அமரிக்காவில் வசிக்கும் மூத்த மகனின் ஞாபகம் வந்துவிட்டது. கதையை நிறுத்திவிட்டு வீட்டின் சுவரில் மாட்டப்படிருந்த கடிகாரத்தை அண்ணார்ந்து பார்த்தாள்.

**நேரம்**
**காலை 08 மணி 49**
**நிமிடம் 53 செக்கன்கள்**

வீட்டு முற்றத்தில் கிடந்த நாய் ஊளையிடத் தொடங்கியது. "இதுக்கு வேறை வேலை இல்லை. இரா முழுக்கப் பெட்டை நாயைத் தேடி ஓடுறது. இப்ப கிடந்து ஊளை இடுகிறார்" தனது கையிலிருந்த தடியை நாயை நோக்கி ஓங்கினாள் கோகிலா. அது பழக்கப்பட்ட நாய். சிறிது தள்ளிப் போய் நின்று கோகிலாவை அண்ணார்ந்து பார்த்தது."பாவம் விடுங்கோ" கோகிலாவின் மகள் சொன்னாள். அதற்கிடையே மெல்ல இறங்கி நாயைப் பிடிப்பதைப் போல பாசாங்கு செய்தான் கோகிலாவின் பேரன். "கடிக்கும் கவனம்" மகனை எச்சரித்தாள் கோகிலாவின் மகள்.

**நேரம்**
**காலை 08 மணி 52**
**நிமிடம் 53 செக்கன்கள்.**

கார் ஒன்று வந்து வீட்டுக் கேற்றடிக்கு முன்பாகச் சற்றுத் தள்ளி நிறுத்திய சத்தம் கேட்டது." பாரெணை. வந்திட்டினம் போலை" கோகிலாவின் மகள் சொன்னாள். "வா தம்பி! கோகிலா வந்தவரை வீட்டிற்குள் அழைத்தாள். வந்தவர் ஒரு கட்ட ஒப்பந்தகாரர். அவரைப் பின் தொடர்ந்து இன்னும் இருவரும் வந்தனர். ஒவ்வொரு இடமாகக் கூட்டிக் கொண்டு போய் கோகிலா காட்டி என்ன செய்ய வேண்டும் என்று தனது விருப்பத்தைச் சொன்னாள்.

"இது என்ரை விருப்பம். இனி வீட்டுச் சொந்தக்காரி வந்து நிக்கிறா. அவவிட்டையும் கேளுங்கோவன்" என்று தனது மகளைக் காட்டினாள். அவள் தனது மகனுக்குச் சாப்பாட்டை ஊட்டி விட்டபடி கதை சொன்னாள்.

**நேரம்**
**காலை 08 மணி 54**
**நிமிடம் 53 செக்கன்கள்.**

நாய் வந்தவர்களைப் பார்த்துக் குரைத்தபடி நின்றது. அதையே கண் கொட்டாமல் கோகிலாவின் பேரன் பார்த்துக் கொண்டிருந்தான். கோகிலாவின் கவனம் வீட்டுத் திருத்த வேலையில் திரும்பியது.

"வந்தால் தங்கி நிண்டு போக வசதியா எல்லாத்தையும் இவர் செய்யச் சொன்னவர். அதோடை அண்ணாவும் அமெரிக்காவிலை இருந்து கதைக்கேக்கை சொன்னவர். பிள்ளையளும் வளந்திட்டினம். இனி அடிக்கடி வந்து போனால்தான் உறவு இருக்கும். அதாலை நாங்கள் வந்து நிற்கக் கூடியதாகவும் வசதியாக வீட்டைத் திருத்துங்கோ. நீங்கள் ஒண்டும் செலவழிக்கத் தேவை இல்லை. எல்லாத்தையும் நானே பாப்பன்" எண்டு. கோகிலாவின் மகளின் சிந்தனை எல்லாம் வீட்டைத் திருத்துவது பற்றியதாக பற்றியதாக இருந்தது.

**நேரம்**
**காலை 09 மணி 00**
**நிமிடம் 53 செக்கன்கள்.**

திடீரெனக் கோகிலாவின் வீட்டிற்கு முன்னால் மோட்டார் சைக்கிள் ஒன்று அடிபட்டு விழுந்த சத்தம் கேட்டது. சாலையில் நின்ற எல்லோரும் மோட்டார் சைக்கிள் அடிபட்டு விழுந்த இடத்தை நோக்கி ஓடினர். மதிலோடு ஒட்டி விழுந்து கிடந்தவரைத் தூக்கி நிறுத்த முயற்சி செய்தனர். "ஐஸ் தண்ணி இருந்தால் கொண்டு வாங்கோ." யாரோ ஒருவர் சத்தம் போட்டுச் சொன்னார்.

குழந்தையைப் பாதுகாக்க அந்தாள் பிறேக்கைப் போட்டுது. நல்ல காலம் குழந்தை சின்னக் காயத்தோடை தப்பீட்டுது. மோட்டச் சைக்கிள் காரருக்குத்தான் பாவம். நல்ல அடி" என்று ஒருவர் மற்றவருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.




# ஆயிஷா

## ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியை எழுதிய முன்னுரை

இந்த விஞ்ஞான கேள்வி – பதில் நூலையும், இவ்வரிசையில் வரவிருக்கும் இன்ன பிற பன்னிரண்டு நூல்களையும் தமிழில் எழுதத் தூண்டியது ஆயிஷாதான். இந்த நூலுக்குள் நுழையும் முன்னர் ஆயிஷாவைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் இந்தப் புத்தகமெங்கும் வார்த்தைகளாக வாழ்பவள் அவள்தான். உங்களிடம் சொல்வதில் என்ன இருக்கிறது. இதை எழுத்திக் கொண்டிருக்கும் இந்த நொடியில் என் விழிகள் கனத்துப்போகுமாறு கண்ணீர் கொப்பளிக்கிறது. இந்த நூலை எழுதிய தேர்ந்த ஒரு விஞ்ஞான வாதிக்கும், ஆயிஷாவின் கதையை எழுதிக் கொண்டிருக்கும் ஒருத்திக்கும் இடையில்தான் எத்தனை வித்தியாசம்? என் ஆயிஷாவை நினைக்கும்போது மட்டும் இப்படிக் குழந்தை மாதிரி, துக்கம் கொப்பளிக்க அழ நேர்கிறது எனக்கு.

எனக்கு முதன்முதலில் தெரிய வந்த ஆயிஷாவுக்கு 15 வயது. நான் அறிவியல் ஆசிரியராகப் பணியாற்றிய ஒரு கிறிஸ்தவப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பி பிரிவில் ஐம்பத்தாறு மாணவிகளில் ஒருத்தி அவள். அப்பள்ளி மாணவியர் விடுதியின் காப்பாள யுவதிகளில் ஒருத்தியாக அங்கேயே தங்கியிருந்த எனக்குச் சற்றே ஏறக்குறைய ஒரு செக்கு மாட்டு வாழ்க்கை பழகிப்போயிருந்தது.

நாங்கள் எட்டுப் பேர் அவ்விதம் காப்பாள யுவதிகளாக நியமிக்கப்பட்டிருந்தோம். திருமாணமாவதன் மூலம் இந்தச் சுழல் வாழ்விலிருந்து தப்புவோர், அவர்களுக்குப் பதிலாய் வரும் புதியோர் தங்கள் தங்கள் திருமணத்திற்காகக் காத்திருக்கத்தொடங்கும் அப்பணியிடத்தில் சற்றே ஏறக்குறைய நிரந்தர யுவதிகளாக நானும் ஆஸ்துமாக்காரி ஒருத்தியும் திருமணமாகாமல் தங்கிப்போனோம்.

நீண்ட பகலும் நிம்மதியற்ற இரவுகளும் என்னைத் தின்று கொண்டிருந்த அந்த நாட்களில் எனக்கு அறிமுகமானவள் அவள். அதிகம் கவர்கிற விதமில்லை ஆயிஷா. பற்கள் துருத்தியபடி முகத்தில் வந்து விழுகிற கேசத்தைப் பற்றிய அக்கறையின்றி நாலாவது வரிசையில் குச்சியாக அமர்ந்திருக்கும் ஒருத்தி ஆசிரியையின் அபிமானத்தைப் பெற வாய்ப்பில்லை. தவிர நான் அவர்களது வகுப்பாசிரியையும் இல்லை. வருகைப் பதிவேட்டை சரி செய்யவும், ஒவ்வொரு மாணவியையும் நெருக்கமாக அறியவும் வாய்ப்பில்லை. ஆகையால் முதலில் எனக்கு ஆயிஷா யாரோ ஒருத்தி.

முதன்முதலில் அவளை அறிய நேர்ந்த சந்தர்ப்பத்தை நினைக்கிறேன். எனக்குச் சிலிர்க்கிறது. பல ஆண்டுகளாக ஒருத்தி வகுப்பில் ஒரு குறிப்பிட்ட பாடத்தையே தொடர்ந்து போதிக்கும் எல்லா ஆசிரியைகளையும் போலவே நானும் ஒரு எந்திரமாய் ஆகிப்போயிருந்தேன்.சில வேளைகளில் சில பாடங்களை நடத்தினோமோ என்ற ஞாபகம் இல்லாமல் கூட நடத்தியிருக்கிறேன்.

இத்தனை வருடத்தில் பத்தாம் வகுப்பு அறிவியல் புத்தகத்தில் என்ன பெரிதாக மாறிவிட்டது? காலையில் எழுந்து பல் துலக்குவதை உற்சாகத்தோடவா செய்கிறோம்? எப்போதாவது புதிய பிரஷ் அல்லது பேஸ்ட்! இங்கே அதுவும் இல்லை. அதே ஓம்ஸ் விதி. ஒரே செல் பிரிதல். புதிதாகத் தெரிந்து கொள்ளும் ஆர்வமற்று ஓர் எந்திரமாய் கீச்சிட்டுக் கொண்டிருந்த என்னை என் முகத்தில் கேள்விகளால் ஓங்கி அறைந்தாள் ஆயிஷா.

அன்று காந்தவியல் குறித்த பாடம். பூமி எப்படி ஒரு காந்தமாக உள்ளதென விளக்கிக் கொண்டிருந்தேன். ஒரு காந்தம் அதுவும் செவ்வக வடிவக் காந்தம், அதைக் கையில் உயர்த்திக் காட்டினேன். சிரமமே இல்லை. காந்தத்தின் வட நோக்கு அம்சம் குறித்து வழக்கமான எந்திரத்தனத்துடன் யாவரையும் உறங்க வைத்துவிடும் என் தொனியில் கரும்பலகையில் சில கிறுக்கல்களுடன் நடத்திக் கொண்டே போனேன். எவ்வளவு நேரமோ?

“மிஸ்” என்றொரு குரல். கரும்பலகையிலிருந்து திரும்புகிறேன். எதற்காகவோ திடுக்கிட்டபடி எழுந்து நிற்பவளை வழக்கமான எங்கள் அக்கறையற்ற பார்வையுடன் “என்ன வாந்தி வருதா?” என்றேன். வகுப்பு கொல்லெனச் சிரித்தது. சரியான முட்டாள் நான். எப்பேர்ப்பட்டவள்? என் ஆயிஷாவைப் போய் இப்படிச் சொல்லி இருக்கிறேன்.

“இல்லை மிஸ் சந்தேகம்”

இது நிச்சயம் ஆச்சரியமான ஒன்றுதான். சராசரி ஆசிரியை யாரையும் இது எரிச்சலூட்டுவது. சட்டென முகம் சுருக்கி சுள்ளென எரிந்து விழும் குரலில் “என்ன?” என்றேன். கடைசி வரிசையில் யாரோ சிரித்தார்கள். அப்பெண்ணின் இளைத்த தேகம் நடுங்குவதைக் காண முடிந்தது. பக்கத்து இருக்கைக்காரி அவளது சட்டையை இழுக்கிறாள். காப்பாற்றி உட்கார வைக்கும் முயற்சியில். மறுபடியும் “என்ன?” என்றேன்.

“மிஸ் அந்தக் காந்தத்தை இரண்டாக வெட்டினா என்ன ஆகும், மிஸ்?”

நெடுநாள் தூக்கத்திலிருந்து எழுந்தவள் போலானேன். இதுவரை இல்லாத அர்த்தத்தில் அவள் என்னைப் பார்த்தாள். நான் அறிவியல் போதினியாக வந்துவிட்ட இந்த ஆறு ஆண்டுகளில் காந்தவியல் பற்றி நான் சந்திக்கும் முதல் சவால். காந்தத்தைப் பற்றி யோசித்து மூன்று நிமிட அவகாசத்திற்குப் பிறகு சற்றுப் பொறி தட்டியது.

“ரெண்டு காந்தம் கிடைக்கும்” சரி பதில் சொல்லியாகி விட்டது. ஆனால் அவள் உட்காரவில்லை. மிகக் கடினப்பட்டுப் புன்னகைக்க முயற்சி செய்தாள்.

அந்தக் காந்தத்தை வெட்டிக்கிட்டே போனால்? உதாரணமாக நமக்கு இந்தக் காந்தத்தைத் துண்டாக்கிக் கிடைத்த காந்தங்களின் எண்ணிக்கை ஒரு முடிவுறா எண் என்று வைச்சிட்டா..?”

“ரொம்ப சிம்பிள்மா. முடிவுறா எண்ணிக்கையில் காந்தம் கிடைக்கும்”

மீண்டும் நிசப்தம். லேசாக வியர்க்கிறது. அவளுக்கு வகுப்பு உற்சாகத்தில் ஒரு போட்டியை ரசிப்பது போல் உணர்ந்தேன். உடனே “உட்காரு” என்றேன். பின் நடந்து கொண்டிருந்தேன். ஏதேதோ பாவனையாகப் பேசிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக மணி அடிக்கும்வரை அலைந்துவிட்டு வகுப்பிலிருந்து வெட்கமில்லாமல் மிடுக்காக வெளியேறினேன்.

அடுத்த வகுப்பறையைத் தாண்டியிருக்க மாட்டேன். கூடவே வந்தது நிழல்.“மிஸ்,..ப்ளீஸ், ஒரே ஒரு நிமிசம் மிஸ்...” அப்படிச் சொல்லும்போது அவள் முகத்தைப் பார்த்திருக்க வேண்டும் நீங்கள்! புறக்கணிக்கவே முடியவே முடியாது.

“என்ன சொல்லு?”

“காந்தம் பத்தித்தான் ..மிஸ்”

“சொல்லுமா... ரைம் ஆச்சில்ல..”

முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை ஒரே நேர் கோட்டில் வெச்சா... எதிர் துருவங்களைக் கவரும். அதன் இயல்பு என்னவாகும்?”

(ஆயிஷா வருவாள்)

> **“ஆயிஷா என்ற இந்நூல் இரா. நடராசன் அவர்களால் எழுதப்பட்டு பாரதி புத்தகாலயத்தால் வெளியிடப்பட்ட நூல். 21 தடவைகள் மீள் பதிக்கப்பட்டு – ஒரு இலட்சம் பிரதிகள் விற்பனையான இந்நூலை, வெறுமனே நூல் என்று கடந்து விட முடியாது. ஆசிரியர்களுக்கான ஒரு வழிகாட்டி நூல். நம் ஆசிரியர்களுக்கும் இதை சமர்ப்பித்து மீள் பிரசுரம் செய்கிறோம்.”**



# பெடரர் அடித்த சதம்!

சதமடித்து, இன்னமும் ஆட்டமிழக்காது கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறார் 37 வயதான சுவிஸ் டென்னிஸ் வீரரான ரோஜர் பெடரர். அண்மையில் டுபாயில் நடந்து முடிந்த டென்னிஸ் சுற்றுப்போட்டியில், கிரேக்க நாட்டு வீரரைத் தோற்கடித்து, தனது 100 ஆவது ஒற்றையர் ஆட்டக் கிண்ணத்தைச் சுவீகரித்திருக்கிறார் பெடரர்.

டென்னிஸ் உலகில் அமெரிக்கரான ஜிம்மி கொன்னேர்ஸ் இதுவரையில் அதி உச்ச வெற்றிக் கிணணங்களாக 109 கிண்ணங்களை வென்றுள்ளார். பெடரர் வென்றெடுத்த 100 கிண்ணங்களுக்குள் 20, கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் வென்றவையாகும். பல தடவைகள் இவருக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளது விம்பிள்டன் களம். டுபாய் கிண்ணத்தைப் பொறுத்த மட்டில், இவர் எட்டாவது தடவையாக இந்தக் கிண்ணத்தைத் தனதாக்கி இருக்கிறார்.

ஸ்ரேபனஸ் சிற்சிபாஸ் என்ற கிரேக்க வீரரிடம் இந்த வருட ஆரம்பத்தில், அவுஸ்ரேலிய ஓபனில் பெடரர் தோல்வியைத் தழுவியிருந்தார். அதற்குப் பழிவாங்குவது போல, டுபாய் இறுதி மோதலில் ஸ்ரேபனஸை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார் பெடரர். 99 ஆவது வெற்றியை நூறாக மாற்றுவதற்கு இவர் கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் போனார்.

இந்நிலையில் 109 என்ற இலக்கை எட்டிப் பிடிப்பது என்பது சுலபமாக இருக்கப் போதில்லை என்றே அவதானிகள் கருதுகிறார்கள்.

# தன்னடக்க நாயகன்..

இந்தியாவின் அணித் தலைவராக இருந்து, அந்தப் பொறுப்பை இளம் வீரரான கோலியிடம் கையளித்து விட்டு இன்றும் சிறப்பாக ஆடிவரும் டோனியின் தன்னடக்கத்தை வெளிப்படுத்தும் சம்பவமொன்று அண்மையில் அரங்கேறி இருக்கின்றது.

இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் தொடங்கும் முன்பு, மகேந்திரசிங் டோனியை, அவர் பெயரில் திறக்கப்பட்ட ஒரு பெவிலியனின் திறப்பு விழாவுக்கு தலைமை தாங்க அழைத்திருந்தார்கள். என் வீடு தானே பிறகெதற்கு அதற்கு நான் தலைமை தாங்கி திறப்பு விழவை நடத்த வேண்டும் என்று பணிவோடு மறுத்துவிட்டார் தன்னடக்கமான இந்திய கிரிக்கெட் நட்சத்திரம்.

இவரது பிறந்த இடமான ஜார்கண்டில்தான் இவர் பெயரில் இந்த ஸ்ரேடியம் எழுப்பப்பட்டுள்ளது. மும்பை நகரில் சுனில் கவஸ்காரின் பெயரிலும், புது டில்லியில் ஷேவாக்கின் பெயரிலும் ஏற்கனவே பெவிலியன்கள் கட்டியுள்ளார்கள். கடந்த வெள்ளிக்கிழமை நடந்த போட்டிதான் சொந்த மைதானத்தில்



நடந்த போட்டிதான் டோனியின் இறுதிப் போட்டியாக இருக்கும் எனக் கருதப்பட்டது.

ஆனாலும் அவர் போட்டியில் சோபிக்க வில்லை. இதுவரையில் 340 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடி, 10,000 ஓட்டங்களுக்கு மேல் குவித்திருப்பவர் டோனி. அடுத்த உலகக் கிண்ணத்தில் விளையாடும் போது 38 வயதாகி விடும். இந்தியாவின் தலைசிறந்த விக்கெட் காப்பாளர் டோனி தான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லா விட்டாலும், ஆட்டத்தின் போக்கை நிர்ணயிக்கும் இவரை, எப்பொழுது களத்தில் இறக்குவது என்பது விவாதத்திற்குரிய விடயமாகவே உள்ளது.

WWE இல் 2021 வரை றொண்டாவின் ஒப்பந்தம் நீள்கின்றது. 2018 இல் கைச்சாத்தான ஒப்பந்தத்தின்படி முதல் 12 மாதங்களும் முழு அளவில் பங்கேற்க வேண்டும். அதன் பிறகு இவருக்கு அந்த நெருக்குதல் கொடுக்க முடியாது. மன உளைச்சலில் இருக்கும் இவர் இனி என்ன செய்யப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இந்த ஞாயிறு (இன்று) அமெரிக்காவில் இடம்பெறும் Fast Lane என்ற மோதலில் சார்லொட் - லிஞ்ச் மோதல் இடம்பெறப் போகிறது. இதில் லிஞ்ச் வென்றால், றெஸ் ஸில்மேனியா 35 இல் சார்லொட் - லிஞ்ச் - றொண்டா என்ற மும்முனை சண்டை இடம் பெறும். இதற்கிடையே நொண்டியவாறு நின்ற லிஞ்சிடம் சீண்டிய சார்லொட் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பது உதிரிச் செய்தி!

“ஷீல்ட்” என்ற பெயரில் முன்பொரு கூட்டணி இருந்ததல்லவா? இதில் “சபை குழப்பி” அம்ப்றோஸ் பிரிய, கூட்டணி கலைந்து விட்டது. WWE அமைப்பை விட்டு அம்ப்றோஸ் அடியோடு விலகப் போகிறார் என்றும் வதந்தி வந்தது. இப்பொழுது மேடையில் அரங்கேறிய பல “நாடகங்களின் ” முடிவில், பிக் டோக், செத் றொலின்ஸ், அம்ப்றோஸ்-கொண்ட கூட்டணி “ஷீல்ட்”மறுபடியும் உருவாகி இருக்கின்றது.

இவர்களுக்கு எதிராக மக்கின்ரயர், கோர்பின், லாஷ்லி கூட்டணி Fast Lane இல் அடிபடப்போகின்றது. எப்படி எப்படியெல்லாம் மோதல்களை சிருஷ்டிக்கிறார்கள்? அடித்து, அடிவாங்கி உழைக்கலாம் என்பதற்கு இந்த விளையாட்டு நல்லதொரு நாடக மேடைதான்.

# நாடகமன்றோ நடக்குது!



# சின்னப் பபுயலின் கதை...!



இந்தச் சிறுவனுக்கு வயது ஏழுதான். இவன் 100 மீற்றர் தூரத்தை 13.48 விநாடிகளில் ஓடி முடிப்பது எல்லோருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகிலேயே அதிவேகமாக ஓடக் கூடிய சிறுவன் இவன் என்கிறார்கள். றுடொல்ஃப் இங்ரம் என்ற இயற்பெயர் கொண்ட இவன் “Blaze” என்றே அழைக்கப்பட்டு வருகிறான். ஆறு மாதங்களுக்கு முன்பு, இவன் றக்பி விளையாடிய சமயம் புளோரிடா (அமெரிக்கா) மாநிலச் சிறுவனின் தீரம் வெளியே வந்திருக்கின்றது. இந்த அவதானிப்பும் வெளி ஊக்குவிப்பும் இவனைத் தடகள விளையாட்டுகளுக்கு கொண்டுவந்து சேர்த்துள்ளன.

இவனுடைய தந்தையின் கூற்றின்படி, இவனது ஓட்ட வேகம் பதிவு செய்யப்பட்டபோது அது 13.48 விநாடிகளைக் காட்டியதாகக் கூறப்படுகின்றது. இது உண்மையாக இருந்தால், இதுவொரு உலக சாதனை என்கிறார்கள். ஏழு வயதுச் சிறுவன் ஓடிய அதி வேகமாக 13.67 விநாடிகளே பதிவில் இருப்பதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். இங்கே தேசிய அளவில் இடம்பெற்றுள்ள ஓட்டப்போட்டிகளில் தனது மகன் 20 தங்கப் பதக்கங்கள் உட்பட, 36 பதக்கங்களை வென்றிருக்கிறான் எனச் சொல்லிப் பெருமைப்படுகிறார் சிறுவனின் தந்தை.

ஆறு வயதிலிருந்தே றக்பி விளையாடும் தன் மகன், வயதில் கூடியவர்களோடு மிகச் சிறப்பாக விளையாடி வந்தான் என்பதையும் இங்கே இவர் சுட்டிக் காட்டத் தவற வில்லை. கண்ணை மூடித் திறப்பதற்குள் மைதானத்தின் ஒரு பக்கத்திலிருந்து ஓடி மறு பக்கத்திற்கு வந்து விடுகிறான் என்று பிரமிப்போடு கூறுகிறார் ஒரு ரசிகர். இந்தச் சின்னப் பபுயல்,, இனிப் பெரும் சூறாவளியாகச் சுழன்றடிக்கப் போகின்றது.



# New Sun Ceramics (PVT) Ltd

Elegance- Quality- Affordable

சித்திரை – தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் விசேடவிலைக் கழிவு
15% தொடக்கம் 50% வரை
இன்றே விரையுங்கள்!

கிளிநொச்சியில் நீங்கள் கண்டிராத எண்ணிப்பார்க்க முடியாத புதிய வடிவிலான Floor tiles, Wall tiles மற்றும் குளியலறை சாதனங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் உங்கள் எண்ணம் போல் நேர்த்தியானதும் தரமானதாகவும் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்.

A9 கண்டி வீதி கிளிநொச்சி (பழைய மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக)
A9 Kandy Road Kilinochchi (Opposite to the old Hospital) T.P-0212283872

அனைத்து வைபவங்களையும்
ஒரே கூரையின் கீழ் நடாத்திட

R.V. திருமண மண்டபம்

R.V. பந்தல் சேவை












R.V. புடைவையகம்

அனைத்து தொடர்புகளுக்கும்
சொந்த முகவரி:
விநாயகர் வீதி, மயிலிட்டி, யாழ்ப்பாணம்
தற்போதைய முகவரி:
369/6 ஆம் யூனிட் , தருமபுரம், பரந்தன்
[redacted] கிளிநொச்சி


## புதிதாக உதயமாகியுள்ளது

Star Rest
GRAND WEDDING HALL
& LUXURY APARTMENT ROOMS

# Star Rest திருமண மண்டபம்

கிளிநொச்சி நகரில் பரந்தன் சந்திக்கு அருகாமையில் அதிநவீன நுட்பத்துடன் முற்றிலும் குளிரூட்டப்பட்ட திருமண மண்டபம் Luxury Apartment Rooms மற்றும் ரெஸ்ரோறன்ற் உதயமாகியுள்ளது.

நிகழ்வுக்கான முற்கூட்டிய பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்! ஒரு முறை விஜயம் செய்து பார்வையிடுங்கள்!!



- திருமண மண்டபம்
  Family ரெஸ்ரோறன்ட்
- சமைப்பதற்கான வசதிகள் கொண்ட Rooms
- எழில்மிகு கிளிநொச்சியின் மாலைக்காட்சியை ரசிப்பதற்கான மேடைத்தளத்திலுள்ள BBQ Roof Top ரெஸ்ரோறன்ற்
- இலவச Wifi வசதிகள்
  D/J Dmx தொழில்நுட்பம்
- விஸ்தரிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடம்
- மணமகள் அலங்காரம்
- இந்தியன் வெஸ்டன் சைனீஸ் உணவுகளுடன் கூடிய திருமணம் மற்றும் சகல நிகழ்வுகளுக்கும் அலுவலக கலந்துரையாடல் சிறந்த முறையில் ஒழுங்கு செய்து தரப்படும்.

160th, Mile Post
5th Canal Lane, A9 Road, Paranthan.
0212280555
0772315521
www.starresthotel.com
Star Rest Hotel


இப்பத்திரிகை இல.10, வில்லம் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள நோர்சி மீடியா ( பிறைவேட் ) லிமிடெட் நிறுவனத்தால் 17.03.2019 அன்று வெளியிடப்பெற்றது.